- Page - No - 105 -

அமிர்தவசனி

தெய்விக மாதப் பத்திரிகை

மலர் : 14 இதழ் : 3	சுபகிருதுஸு ஆனிமீ ஜூன்—ஜூலை 1962	வருட சந்தா ரூ. 3-00



ஆலவாய் அரனை ஐராவதம் வழிபடல்

சித்திர விளக்கம் 3. பக்கம் 102

Acc. No. 18583.

106

உள்பொருள்

		பக்கம்
1.	ஓட்டைக் குடமும் பாட்டால் அடையும் (திருப்புகழ்மணி) ...	97
2.	வெள்ளை யானை சாபம் தீர்த்தது (கி. வா. ஜகந்நாதன்) ...	102
3.	குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ...	104
4.	"மூலா நிலமதின்" பொதுத் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ...	109
5.	வெவ்வினை வாழ்வு (கி. வா. ஜ.) ...	117
6.	நக்கீரர் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.) ...	120
7.	பாரதம் பாடிய பெருந்தேவனார் (வித்துவான் வே. சிவசுப்ரமண்யம், விரிவுரை யாசிரியர் தமிழ்க் கல்லூரி, மயிலம்) ...	125
8.	உண்மையும் போலி யுருவமும் (ரஸபதி) ...	129
9.	எல்லாம் உனக்காக (அ. கி. ரங்கராஜன்) ...	139
10.	SAINT ARUNAGIRI AND TAGORE (*Thiruppugal Mani*) ...	141

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருது௵ ஆனி௴ ஜூன்—ஜூலை 1962	இதழ் 3

ஓட்டைக்குடமும் பாட்டால் அடையும்

(திருப்புகழ் மணி)

முருகனைப் பூரணமாய்க் கண்டறிந்தவர் ஒருவருமில்லை. முருகனுக்கே தன்னைப் பூரணமாய் தெரியாது. அவன் தன்பெருமை தானறியாத் தன்மையன். தத்துவ முகமாய்ப் பார்த்தால் அவன் எங்கும் நிறைந்திருப்பது தெரியும்.

வேதங்கள் "ஹரி ஓம்" என்று கோஷிக்கிற ஓங்கார சுவரூபமான முருகனை நம் சிற்றறிவு கொண்டு அறிய முடியாது. அறிய முடியாத பொருளை அறிந்தேன் என்று சொல்வது மெய்யல்ல. அன்பிற்குக் கட்டுப்பட்டவன் முருகன்: அன்பினால் அவனையனுபவிக்க முடியுமேயன்றி அறிவால் அறிய முடியாது.

உயிருக்குயிராய் நிற்கும் பிரம்மம் அநேக நாம ரூபங்களோடு, உலகமெனும் நந்தவனத்தில் சிருஷ்டியெனும் விளையாட்டை விளையாடுகிறது. மாயை

அன்புமுகம் இனபமொழி யான திரிசடைபோல்,
துன்பம் மறக்கச்செய் தூயோரைக் காண்பேமோ

யெனும் திரைமறைவில் தான் மறைந்து நின்று, ஜீவர்களாகிய தன் குழந்தைகளோடு கண்ணும்பூச்சி விளையாடுகிறது. இந்தத் தத்துவத்தை உலகத்திற்கு உணர்த்த வேண்டுமென்று விரும்பினனும் முருகன். அருணகிரியாரின் உள்ளத்தில் தான் புகுந்துகொண்டான். அருணகிரீ! என்னுடைய தத்துவத்தைத் திருப்புகழ் மூலமாக மக்களுக்குணர்த்தி, அவர்களை என்னுடன் விளையாடச் செய்யும் பணியை உனக்குத் தந்தேன் என்றனும். விநயகர் கந்தனுடைய தத்துவத்தை அருணகிரியாருக்கு உணர்த்தி விட்டார்.

மனம் கல்போல் மொட்டா யிருக்கிறது. அது மலர்ந்து பக்குவமாக வேண்டும். முருகன் உள்ளே புகுந்தான். அருணகிரியாரின் மனம் மலர்ந்தது. திருப்புகழ்த்தேன் அதிலிருந்து பெருக ஆரம்பித்தது. மனமாகிய மலரை வைத்து, அதை அன்பாகிய நூலால் கட்டி, உன் பாதாரவிந்தத்தில் அணிய வரமருள்வாய் என்று முருகனை வேண்டினர். "ஆசைகூர் பக்தனேன் மனோபத்மமான பூவைத்து, நடுவே யன்பான நூலிட்டு, நாவிலே சித்ரமாகவே கட்டி, ஒரு ஞானவாசம் வீசி ப்ரகாசியா நிற்ப, மாசிலோர்புத்தி அளிபாட.........உன் கோல ப்ரவாள பாதத்தி லணிவேனே" என்றார்.

மனம் பக்குவமடையா விட்டால், ஆண்டவனை நினைக்கும் பொழுது, ஆசையாகிய பிசாசுகுடிகொண்டு உலக நினைவை உண்டாக்குகிறது. ஆண்டவனுடன் ஏகாந்தமா யிருக்க வேண்டும். அவன ஏகமானவன். நித்தியமானவன். மலமற்றவன். தன்னை நினைப்பவர்களின் மலத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவர்களை நிர்மல மாக்குபவன்.

குலத்தால் இழிந்தவள்தான் ; கோதற்ற சீல
நலத்தால் உயர்சபரி, ராமபக்தை யாயினளே.

ஆசையின் அலையினால் மனம் நீர்போல் அலைந்து கொண்டிருக்கிறது. அந்த அலையை நிறுத்தி குரு நாதனாகிய முருகனுடன் ஏகாந்தமா யிருக்கச் சாதகம் செய்ய வேண்டும்.

மனத்தின் அலையை நிறுத்தக் கற்றவனே ஞானி; அவனே சூரன். முருகனை வேண்டினால் அவன் அலையும் மனத்தை அடக்கி விடுவான். அவன் அலைவாய்க் கரையில் அமைதியாய் நின்றிருப்பவன். அலையும் கங்கைநீரைத் தன் சடையிலே யடக்கிய சிவன் மைந்தன். சிவனே ஷண்முகன். "நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை" என்னும் தேவாரம் இதை யுணர்த்துகிறது. அவன் தன் தொண்டருக்குக் கல்லாதனவெல்லாம் கற்பிப்பானும். காணாத பொருளைக் காட்டும் தெய்வத்தை மனத்தால் பிடித்தால், அது காணாத காட்சியெல்லாம் காட்டுமாம்.

நாம் உலகத்தைக் காண்கிறோமேயன்றி அதில் மறைந்து விளையாடும் தெய்வத்தைக் காண்பதில்லை. அதைக் காட்டுவதற்கு உதவ ஒருவர் வேண்டும்.

ராதை கற்பழிந்தவள் என்று நினைத்தனராம் அவள் தோழிகள். ஓட்டைக் குடமொன்றைக் கொடுத்து இதில் யமுனை நீரை மொண்டு வந்தால் உன் கற்பு தூய்மையானதென்று சொல்வோம் என்றனராம். யமுனையில் விளையாடுபவன் கண்ணன். "கண்ணா! என்மானம் உன்னுடையது. அதை நீயே காக்கவேண்டும் என்றாள் ராதை. ஓட்டைக் குடத்தில் நீர்மொண்டாள். யமுனாதீர விஹாரியாகிய கண்ணன் ராதையின் குடத்து நீரிலும் விளையாடினான். குடத்தின் ஓட்டையை அடைத்துவிட்டான். நீரும் நின்றது. திரௌபதி காக்கப்பட்டதுபோல் ராதையும் காக்கப்

கண்டபடி யேசுவதும், கண்கலங்கப் பேசுவதும்
கொண்ட சிசுபாலன், குணப்பட்ட தில்லையே,

பட்டாள். ஆண்டவனிடத்தில் கற்பு உள்ளவர் கை விடப்படார் என்றது உலகம்.

அன்பால் உருகிய பக்தர்களின் மனமே ராதையின் அவதாரம். ஜகன்மாதாவாகிய ராதை கண்ணனை அன்பினால் கலந்தாள். உண்மையான கலப்பு உடல் கலப்பல்ல. அன்பினாலும், உணர்ச்சியினாலும் கலப்பதேயாம். அன்பினால் இறைவனுடன் உள்ளம் கலப்பதே உயர்ந்த கற்பு. கண்ணனாகிய முருகன் ராதையைக் காப்பாற்றினான். முருகன் யார்? "அயன் எனவாகி, அரியெனவாகி, அரன் எனவாகி" விளையாடுபவன்.

மாயையாகிய இருட்டிலிருந்து மக்களையழைத்துக் கொண்டுபோய், ஜோதிஸ்வரூபமாகிய பேரின்பத்தில் சேர்ப்பதற்காக பிரம்மம் பல ரூபங்களை யெடுக்கிறது. அதையே, கண்ணன், கந்தன், சிவன் என்ற பெயரா லழைக்கின்றனர் தொண்டர்கள்.

நாம் எந்த உருவத்துடன் கண்ணாடியின் முன் நிற்கிறோமோ, அந்த உருவையே கண்ணாடி நமக்குத் திருப்பிக் காட்டும். அதுபோல் பிரம்மத்தை, நாம் எந்த உருவாய் நினைக்கிறோமோ அந்த உருவாய்க் காட்சி யளிக்கிறது அது. மனம் கண்ணாடிபோல் தெளிந்த பொழுது இறைவனுடைய உருவம் காணப்படும். மனம் தெளிவது தவத்தினால்.

மனத்தவக் கண்ணாடியில் நடம் கண்ட கோவே என்றார் திருப்புகழில்.

உலகப் பற்றற்றது தவம். மற்றது அவம். அவத்தை யொழித்து ஐம்பொறிகளை யாண்ட தவக் கண்ணாடியாகிய தொண்டருள்ளத்தில் காட்சியளிக்கிறான்

உபகாரம் செய்தார்க்(கு) ஓங்குபுகழ் உண்டு ;
அபகாரம் செய்தால், அவர்நெஞ்சே தானழுமே.

முருகன். தொண்டர்களுடைய உள்ளமாகிய நிலைக் கண்ணாடியில் திருப்புகழ் பாடப்பட்டிருக்கிறது.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்".

என்றார் வள்ளுவர்.

இடைவிடாமல் இறைவனை நினைப்பவரே கற்புடையவர். அது ராதையின் ஓட்டைக்குடமடைத்த வரலாற்றால் விளங்குகிறது.

கோபியர் குடமேந்தி யமுனைக்குச் செல்வார்களாம். இடையில் கண்ணன் எதிரில் வந்து குடத்தையுடைத்துவிட்டு ஓடுவானும். குடம் உடைந்ததேயென்று கோபியர் அழுதால் தன்னைக் காட்டித் தேற்றுவானும். இல்லை எனும் செல்வம் என்ற குடத்தை பகவான் உடைத்து விடுகிறான். செல்வமிழந்தோம் என்று வருந்தும் பொழுது தன்னருளைக் காட்டித் தேற்றுகிறான்.

உலகை சிருஷ்டியே நந்தவனம். அதில் புகுந்து பிரம்மம் சிருஷ்டியென்னும் விளையாட்டை விளையாடுகிறது. உடம்பென்பது அருமையான குடம். அதில் ஒன்பது ஓட்டையுண்டு. முருகனை நிறப்பினல் அதன் ஓட்டைகள் அடைந்து விடும். முருகா சரணம் என்போம்; ஓட்டைக் குடத்தை யடைப்போம்.

முருகா சரணம் சுபம்

நன்றி மறவாத பாரதச் சல்லியன்போல்,
குன்றாப் புகழைக், குவலயத்திற் கொள்வேமோ?

வெள்ளையானை சாபம் தீர்த்தது

[கி. வா. ஜகந்நாதன்]

கருவாசனை போக்கும் காசிமா நகரில் துருவாசமா முனிவர் தம் பெயரால் ஓர் இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து அர்ச்சனை செய்தார். அவ்வாறு வழிபட்டபோது சிவலிங்கம் பெருமான் திருமுடியின் மீதிருந்த தாமரை மலர் ஒன்று கீழே விழ, அதைத்தம் கையால் தாங்கி எடுத்துத் தலையிலும் கண்ணிலும் மார்பிலும் ஒத்திக் கொண்டு புன்னகை பூத்தார் முனிவர்.

அவர் அப்படியே தேவலோகம் சென்றார். அப்போது இந்திரன் ஐராவதத்தின் மேல் ஏறிப் பவனிவந்து கொண்டிருந்தான். துருவாச முனிவர் எதிர்சென்று தாம் கொணர்ந்த சிவப்பிரசாதமாகிய தாமரைப்பூவை இந்திரனிடம் தந்தார். இந்திரன யானையின்மேல் இருந்தபடியே ஒருகையை நீட்டி அதைவாங்கி ஐராவதத்தின் மத்தகத்தின்மேல் வைத்தான். அதனை அந்த யானை துதிக்கையால் எடுத்துக் காலின்கீழ் இட்டுச் சிதைத்து விட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட முனிவருக்கு அளவற்ற வெகுளி உண்டாயிற்று. உடனே இந்திரனைப் பார்த்து, "செல்வச் செருக்கினால் அல்லவா இந்தக் காரியத்தைச் செய்தாய்?

இறைவனுடைய அன்பர்கள் அருவருத்துத் தள்ளுவது பொருட்செல்வம். நான் அளித்த சிவப்பிரசாதத்தை வணங்கி வாங்காமல் அசட்டையாக வாங்கி யானை சிதைக்கும்படி அதன் தலையில் வைத்தாய். உன்னுடைய பதவி நிலைப்பது இறைவனுடைய திருவருளால் என்பதை மறந்து போனாய். இவ்வாறு சிவாபசாரம் செய்த உன் தலையைப் பாண்டிய

ஒருமைந்தன் என்னமல், ஓர்கன்றிற் காகத்
தருமத்தைக் கைக்கொள், தரணிபனை எண்ணுவயோ.

மன்னன் ஒருவன் தன் வலையினுல் சிதறுவானுக! இந்தயானே காட்டானேயாகித் திரிக!'' என்று சாபம் இட்டான்.

" புள்ளியதோல் ஆடை புனைந்தரவப் பூண் அணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையார் அருவறுத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினுய்! என்செய்தாய்!"

இதனைக் கேட்ட இந்திரன் நடுங்கினுன். தேவர்கள் அஞ்சினர். தேவர்கள் முனிவரை அணுகி, " இவர்கள் செய்த அபசாரம் தாங்கொணுத தென்பதில் ஐயமில்லே. ஆயினும் அருள் கூர்ந்து இந்தச் சாபத்தினின்றும் நீங்கும் வழியைச் சொல்லியருள வேண்டும் " என்று வேண்டினர்.

அப்படியே துருவாச முனிவர், " இந்திரன் தலைக்கு வந்தது முடியோடு போகட்டும் " என்று அருள் கூர்ந்தார். " ஐராவதம் நூறுண்டு காட்டு யானேயாகத் திரிந்து மீட்டும் தன் நிலேயை அடையட்டும் " என்று சாபமாற்று உரைத்தார்.

அந்த சாபத்தின்படியே வெள்ளேயானே காட்டுயானேயாகிப் பூமியில் பல காடுகளில் திரிந்து கொண்டிருந்தது. நூறு ஆண்டுகள் நிறைவேறும் சமயம் வந்தபோது கடம்பவனத்தை அடைந்தது. அங்கே பொற்ருமரை வாவியைக் கண்டு அதில் இறங்கி மூழ்கியவுடன அதன் காட்டானே யுருவம் மாறிப் பழைய உருவம் தோன்றியது. உடனே அதன் நெஞ்சில் அன்பு உண்டாக அருகில் தோன்றிய சிவலிங்கப் பெருமானேப் பூசை செய்யும் விருப்பம் உண்டாயிற்று. பொய்கை நீரைக கையால் மொண்டு திருமஞ்சன மாட்டிப் பூச் சொரிந்து வழிபட்டது. அது கண்ட சிவபெருமான் ஐராவதத்தை நோக்கி, " நீ இங்கே ஏன் வந்தாய் ? உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டான். யானே தான் வந்த வரலாற்றைக் கூறி,

---

எசமான் இறக்க, இருந்தசொத்தைக் காத்து
நிசப்பிள்ளேக் கொப்படைத்த ஏகன்பேர் நிற்கிறதே!

"நின் விமானத்தைத் தாங்கும் எட்டுயானைகளோடு நானும் தாங்கும்படி அருள் செய்ய வேண்டும்" என்று இறைஞ்சியது. இறைவன், "இந்திரன் நம்பால் அன்புடையவன். அவனை எப்போதும் போல் தாங்கி வாழ்வதே நமக்கு உவப்பான செயல் என்று சொல்லி விடை கொடுத்தருளினான்.

ஐராவதம் அங்கே ஓரிடத்தில் தீர்த்தம் உண்டாக்கித் தன் பெயரால் ஓர் இலிங்கத்தையும் தாபித்து வழிபட்டு நிற்க, இந்திரன தக்கவர்களை விடுத்து அதனை மறுபடியும் அமரா வதிக்கு அழைத்துவரச் செய்தான.

பண்டுபோல் மீட்டும் எல்லாவிதச் சிறப்புக்களுடனும் வெள்ளையானை இந்திரனுக்கு வாகனமாகும் பெருமையைப் பெற்று விளங்கியது.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

13. கவிராஜ பதயே நமோநம:

கவிராஜ - புலவர்கள் அரசரது, பதயே - தலைவனுக்கு, நமோநம: போற்றி! போற்றி!!

கவியும் கவிஞரும் :

கவி என்பது பாட்டு. கவிஞர் அதனைப் பாடும் புலவர்கள். கவிகளைப் புனையும் புலவர்களையும் கவிகள் என்பர். இவ்வித புலவர்கள் இருவகையினர். (1) தம் வறுமை நீங்கவும் வாழ்க்கை நடத்தவும், உலோபிகளான உலுத்தர்களைப் புகழ்ந்து பாடல் செய்பவர்கள். (2) மறந்தும் மாநுடர்களைப பாடாமல் இறைவன ஒருவனையே புகழ்ந்து தமக்கும் ஏனைய உயிர்கட்கும்

பிள்ளைகள் நூற்றுவரைப் பெற்றிட்டும், காந்தாரி
சள்ளை மனத்தால், சலிபபெய்திச் சாய்ந்தாளே !

ஆண்டவனருள் தந்துதவுமாறு வேண்டிக் கவி செய்ய வல்லவர்கள். இரண்டாம் பிரிவினர்களது பாடல் ஆக்கல் அழித்தல் முதலியனவும் செய்யவல்லது. இவ்வித கவிஞர்களில் தலைசிறந்தோளிர்பவரைக் கவிராஜர் என்று கூறுவதுண்டு. நம் குமாரபிரான் புலவர்கள் அனைவருக்கும் அரசராக உள்ளவர்.

கந்தன் கவிராஜன் :—

ஒரு சமயம் புலவர்கள் அனைவரும் ஒன்று கூடி தம்முள் தலைசிறந்த ஒருவரை அறிந்து கௌரவிக்க எண்ணினர். அவர்களுள் யார் தலைவரெனத் தக்கவர் என்று நெடுநேரம் வாதம் நடந்தது. அருந்தமிழன்னையான அவ்வையே புலவர் தலைவி என முடிவுக்கு வந்து அவளுக்கு அக்ரக (முதல்) தாம்பூலந் தந்து சிறப்பிக்கப் புலவர்கள் கூட்டமாகப் போயினர். அதனை அறிந்த அவ்வையார், "அன்பர்களே! என்னைவிட ஐந்திர வியாகரணம் முதலிய நூல்களின் ஆசிரியரான இந்திரனே அவ்வித சிறப்புக்குரியவன். அவனிடம் செல்லுங்கள்" எனக் கூறிவிட்டாள். புலவர்களும் பொன்னுலக வேந்தனான இந்திரனிடம் சென்றனர். ஆனால் இந்திரன் தன்னிலும் அதிகம் கற்றலும் கேட்டலும் உடைய குறுமுனி என்ற அகத்தியரிடம் அனுப்பினான்.

மகத்துவமிக்க அகத்தியர் அவர்களைச் சகலகலாவல்லிக்கே அச்சிறப்பு உரியது என்று கூறிவிட்டார். புலவர் திரள் இப்போது சரசுவதியைச் சார்ந்தது. அத்தேவி அவர்களை நோக்கி "புலவர்களே! திரிபுரசுந்தரியான பார்வதிக்கு வலது கண் கல்வித்தேவியான கலைமகளும், இடதுகண் செல்வத்தேவியான திருமகளும் ஆம் என்பர். ஆதலின், என்னைக் திருக்கண் கனிலொன்றாகக் கொண்டுள்ள காமாட்சி (கா - சரஸ்வதி ;

ஐந்துபிள்ளை நல்லவரா, அனறுகுந்தி பெறருள்;மெய்
மைந்துடைய, தெய்வ வலிமையினு லென்பாரே.

மா - இலக்குமி, அட்சி - கண்களாக உடையவள்) புலவர் தலைவியாகத் தக்கவள். அவளுக்கே இத்தாம்பூலத்தை அனுப்புங்கள் '' என்றாள். புலவர்கள் கௌரிதேவியிடம் சென்று தம் கருத்தை வெளியிட்டனர். உடனே பார்வதியம்மை '' கவிஞர்களே! அருமறை தமிழ் நூலடைவே தெரிந்துரைக்கும் புலவோனும், சிவஞான தேசிகனும், சங்கப்புலவர் தலைமைப் புலவனும், கும்பமுனி கும்பிடும் தம்பிரானும் ஆகிய சரவண வேளே, சகல கலா வல்லப மூர்த்தியாவான். அவனுக்கே அக்ரக தாம்பூலம் அளிக்கத் தக்கது'' என அருளிச் செய்தனர். அவ்வாறே புலவரனைவரும் கந்தபுரம் சேர்ந்து நமது குமார மூர்த்தியை அடைந்து தமது விருப்பத்தை விளக்கிக் கூறித் தாம்பூலத்தை நீட்டினர். அதிக வித சாமர்த்திய கவிராஜ ராஜ்ஞன கந்தபிரானும் தமக்கு மேலொரு தலைமைப் புலவன் இன்மையால் புன்முறுவலுடன் அவர்கள் தந்த புலவர் அக்ரக தாம்பூலத்தை ஏற்றருளினர். உடனே எல்லாக் கவிகளும் கவிராஜர் தலைவனே ! போற்றி ! போற்றி ! எனப் போற்றினர்.

'' புலவீர் என்றெனை அழைத்தீர் புரந்தரனே
 என அவனும் பொதிகை வெற்பின்
இலகிய கோமுனி புலவ னென்றலுமே
 அவனுங் கேட் டிரங்கிநின்று
கலைமகளாம் புலத்தி எனக் கலைமகளும்
 கருத்தழிந்து கௌரி என்ன
மலையரசன மகள் புதல்வன் சரவணவேள்
 புலவனென வகுத்தா ளன்றே.
இவ்வாறு சபையினர்தாங் கேட்டுநனி
 விம்மிதமுற்று இயம் பொணுத
துவ்வாரும் ஒளிவடிவிற் கந்தபுரஞ்
 சென்றிறையைத் துதிதது நிற்ப

மாதுலர் மாமியைப் பாராட்டும் நன்மருகி,
தீதிலாப் பிள்ளைத் திருவெய்தி நிற்பாளே!

-அவ்வா றங் குணர்ந்தருளிப் புன்னகை பூத்
திவ் வரிசை அழகிற் கொண்டேம்
தவ்வா த குணத்திர் ! எனும் சகலகலா
வல்லபன் நம் சாமிதானே ''

மற்றொரு சிறப்பு :

அருட் கவிகள் என்பார் அருளும் பாடல்களும் ஆக்கல் முதலிய ஐந்தொழில்களை ஆற்றவல்லது என்பது முன்னர் கூறப்பட்டது. அவ்வாறு கவிசெய்த கவிராசர் காழிக் கவுணியர் கோனான திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளே. அவரது அமிர்தகவிக் தொடையான தேவார பாக்கள் ஐந் தொழில்களையும் செய்துள்ளன.

(அ) சிவநேசர் குடத்திலிட்டு வைத்திருந்த எலும்பை அங்கம்பூம் பாவையாக உயிர்பெறச்செய்தது. சிருட்டி (ஆக்கல்)

(ஆ) பஞ்சத்தால் வாடிய மக்கட்கு, இறைவன்பால் படிக் காசு பெற்று உணவளித்தது ஸ்திதி (அளித்தல்)

(இ) சமணரை அனல் புனல் வாதங்களில் வென்று கழுவேறச் செய்தது சம்மாரம் (அழித்தல்).

(ஈ) திருமறைக் காட்டில் வேதம் பூசித்த திருக்கதவு அடைக்கப் பாடியது திரோபவம் (மறைத்தல்)

(உ) ஆச்சா புரத்தில் தமது திருமணத்திற்கு வந்த அனைவரும் சிவலோக வாழ்வு பெறுமாறு சிவச்சோதியில் கலக்கச் செய்தது அநுக்ரகம் (அருளல்.)

இவரது அருட்கவிகள் எல்லாவுயிர்க்கும் பயனளித்த சிறப்பை ஆண் பனையைப் பெண்பனை யாக்கியதாலும், மருகலில் விடம் தீர்த்ததும், கொடி மாடச் செங்குன்றூரில் நளிர் சுரம் நீக்கியதும், கொல்லி மழவன் மகள் குமரகண்டவலி

வெற்றிக்கு நாள்கேட்கும் வீணன் துரியனுக்கு,
முற்றுரைத்தான் ; தன்னலமில் சாதேவ முன்னோனே.

நீக்கியதும், கூன் பாண்டியனுக்கு வெப்பு நோயும் கூனும் தொலைத்ததும் பிறவும் விளக்குவனவாம்.

"பயனுகும் நல்லாண் பனைக்கு விடத்திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம்—உயிராகும்
சிந்துமெலும்பிற்குச் சிரபுரத் துச்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு"

(துறைமங்கலத்தார்)

மேலே கூறிய திருஞானக்கன்று அபர சுப்பிரமணியத்தின் அவதாரம் என்பர். இவர்தம் அருள் வாழ்க்கை அற்புதச் செயல்களால், தந்தை மரபு தாய்மரபுகளை விளக்கும் திருவிளக்காயிருந்தார்.

"உபய குலதீப துங்க கவிராஜ சிங்க
உரைபுகலி யூரிலன்று—வருவோனே"

என்ற பழநித் திருப்புகழையும் உன்னுக.

இறையனர் களவியலுரை பற்றி எழுந்த சங்கப் புலவர்களின் கலக்கத்தை உருத்திரஜன்மரென்னும் ஊமைப் பிள்ளையாயிருந்து நீக்கியதும், மேலும், நாயகன் கவிக்கும் குற்றம் நாட்டிய புலவர் நக்கீரர், கோழியைப்பாடிக் குஞ்சைப் பாடமாட்டேன் என்ற பொய்யாமொழிப் புலவர், பழநிதலபுராணம் பாடிய பாலசுப்பிரமணியக் கவிராஜர், வென்றிமாலைக்கவிராயர், சந்தப் புலவர் பெருமான் அருணகிரிநாதர் போன்ற பிற புலவர்கள் தலைவர்கள் போற்றும் மாபெருந் தலைவன் முருகவேள் ஆதலின், பாம்பனடிகளார்

"கவிராஜபதயே நமோநம: என்றனர்.

"நூலறிபுலவ!"

"சுத்த வீறசுரர் பட்டுவிழ வேலைத்
தொட்ட கவிராஜப்—பெருமாள்காண்.

வீடுமன் சொல்லை, வெறுத்தழிந் தானதுரியன ;
நீடைவர் ஏற்றதனுல், நீணிலத்தைக் காத்தனரே.

பொது

திருப்புகழ் விரிவுரை.

[குகஸ்ரீ]

மூலா நிலமதின் மேலே மனதுறு
    மோகா டவிசுடர் — தனைநாடி
  மோனா நிலைதனை நாலு வகையிலு
    மோதா நெறிமுறை — முதல்கூறும்
லீலா விதமுன தாலே கதிபெற
    லேமா ரகசிய — வுபதேசம்
  நீடூ ழிதனிலை வாடா மணியொளி
    நீதா பலமது — தருவாயே;
நாலா ருசியமு தாலே திருமறை
    நாலா யதுசெப — மணிமாலை
  நாடாய் தவமிடர் கேடா வரிகரி
    நாரா யணர்திரு — மருகோனே!
சூலா திபர்சிவ ஞானா யமனுதை
    காலார் தரவரு — குருநாதா!
  தோதீ திருதிரு தீத் செகசெக
    சோதீ நடமிடு — பெருமானே

(பதவுரை) (நாலா ருசி............மருகோனே!)

நாலா ருசி அமுதாலே திருமறை நால் ஆயது - பல வகையான சுவையுடைய அமுதம் போன்ற அழகிய மறைகள் நான்கு ஆயின;

செப மணி மாலை நாடு ஆய் தவர் இடர் கேடா - மணிகள் கோர்த்த செபமாலையை உவந்து உருட்டி, (வேதமந்திர

வண்டிருந்த நாதமது, நம்முள் வளர்ந்தோங்கக்,
கொண்டென்னை, உள்ளொளிதான் கொள்ளைகொள்வ
[தெந்நாளோ

எண்) ஆய்வு செய்கின்ற தவத்தினரின் (உலகியல்) இடர்களை ஒழிப்பவனே !

அரிகரி நாராயணர் திரு மருகோனே - ஹரி ஹரீ (என, அன்பர்கள் மன்னம்செய்)நாராயண மூர்த்திக்கும் மலர்மகட்கும் மருமகனே!

சூல அதிபர் - முத்தலைச் சூல முதல்வரும் ;

யமன் உதை காலார் - (தெளிவிலா) இயமனை உதைத்த திருவடியினரும் ;

சிவ ஞானர் தர வரு குரு நாதா - சிவஞானமே திருமேனி யருமான சிவனார் தந்தருள வந்தருளும் குருநாதா !

(தோதீ............பெருமாளே !)

தோதீ—, திகுதிகு—, தீதீ—, செகசெக — (எனும்), சோதீ நடமிடு பெருமாளே—ஒளிமய (ஒலிமயத்) திருக் கூத்து இயற்றும் தெய்வமே !

(மூலா நிலம்............தருவாயே !)

மோக அடவி உறு மனம் - மோகம் எனும் (பொல்லாத) காட்டில் போகும் மனம் ;

மூலா நிலம் அதின் மேலே சுடர்தனை நாடி - மூலாதாரத் தின் மேலுள்ள ஒளிப் பிழம்பை நோக்கிச் சென்று ;

மோன நிலைதனை நானா வகையிலும் ஓதா - (பயனுன) மௌன நிலையைப் பலவகையிலும் பயினறு ; (அதன்பின்,)

நெறிமுறை முதல் கூறும் லீலா வீதம் உனதாலே - (தியான) வழி முறையை முதலில் (ஆதார மூர்த்திகளாக இருந்து) அருள்கின்ற (அரிய உமது) பலவகையான அருளாட லின்படி ;

கதிபெற நேமா ரகசியம் நீதா - (பேருன) வீடு (அடியேன்) பெறுதற்கு, நியம (தகராலய) ரகசியத்தை நீ தந்தருள் ;

பாலகனுய், அஞ்ஞானக் காளையாய்ப், பாதகமே
மேலனுய், வேதனைதான் மேவியது போதாதோ.

நீடு ஊழி தன் நிலை வாடா மணி ஒளி பலமது தருவாயே - நீண்ட ஊழிக்காலம் எனும் எப்போதும், தனது நிலை தளராத மணி (ஓசையெனும் பர) நாதம், (பரவிந்து எனும்) பேரொளி (தரிசனம்) எனும் பயனை இரண்டும் பலிக்க அருள், (எ-று).

விரிவுரை.

அறிவை மறைத்தது ஆணவம்; மயங்க வைத்தது மாயை. இவைகளை நினைத்துத் திருந்த நேரமின்றி, ஆசையால் குதி போட்டு அவதியடைகிறது ஆன்மா.

அதன் பயனாக, புன்மைக் கருக்குழியில் புகுந்தது. வளம் பெற்று ஓம் உருவில் வளர்ந்தது. வீணான பந்தம் இனி வேண்டேன் பெருமானே! என்று, குவித்த கரத்தொடு கும்பிட்டுப் பிறந்தது. வளர்ப்பார் வளர்க்க வளர்ந்தது.

பழைய வாசனை பல்லிளிக்க, என் இனம், என் உறவு, என் உடல் என்று, மறுபடியும் மோந்து மயங்கியது. ஐயோ! இது என்ன தொல்லை! ஒவ்வொரு பிறப்பிலும், விதி இப்படியா விளையாடும்?

.. உப்பு சப்பு இல்லாத வாழ்க்கை, பழையபடியே உருண்டது; பாழான தொல்லை பல கண்டதுதான் மிச்சம். என்ன கண்றாவியான கதை! இதுதான் 'மோகாடவி' யுறு மனத்தின் சோகானுபவம்.

நலஞ்சிறந்த மறைகள் நான்கு. இருபத்தெட்டு ஆகமங்கள், அம்மறைகளின் உள்ளுரை. வேதாகம சாரம், விரிவான புராணங்கள். அனுபூதிமான்கள் அருளிய சாத்திரங்களும் தோத்திரங்களும், ஏராளமாக நாட்டில் இருக்கின்றன.

பல்வகைச் சுவையாகப் பரிணமித்த நூற்கள் எலாம், வேதங்கட்குச் செய்த விளக்க விரிவுரை என்றே, அறிஞர்கள் அறிந்து ஆனந்தித்தனர். இங்ஙனம்,

---

விருத்தனாய்த் தன்குடும்பப் பாரத்தால் வீழ்ந்து,
விருத்தமா மூச்சின் விரையநிலை மாறுதோ

" நாலா ருசியமு தாலே திருமறை நாலாயது ".
அவைகளின் இன்பச் சுவைகண்ட அந்தணர்கள், மறையின் உள்ள மந்திரங்களை, ஓயாது ஜபமாலை கொண்டு உருவேற்றலாயினர்.

ஓதுவதும், மந்திரங்களை உருவேற்றுவதுமான இதுவே தவம் என்று இருக்கும் அவர்களையும், இழுத்துப் பறிக்கிறது உலகியல் சூழ்நிலை.

அத்தா! அநியாய அந்த இடர்களை, அவ்வப் போதே அகற்றி, கருணையொடு அவர்களைக் காக்கின்றாய்.

'ஜெபமணி மாலை நாடு ஆய்தவர்' என்பது, அவர்கள் நாமம். அவர்கட்கு வரும் இடர் கெடுக்கும் காரணத்தால், இடர்கேடன் என்பது நின் திருப்பெயர்.

காமக் குரோதாதிகள் ஆகிய அகஇடரை அழிப்பார்; அதனுடன் துட்டர்களால் வரும் புறஇடர்களையும் போக்குவார்; வாழ்க்கையில், கண்ணருள் செய் என்று திருவைக் காட்டுவார். வெந்து கருகும் பிறவி வெப்பம் தீர, அருள் மழை பொழிந்து ஆநந்தர் ஆக்குவார்; பொருட் செல்வ பூரிப்புடைய திருமகள் மணாளரான அவரது புனித மருகனை உம்மை,

' ஹரிஹரி நாராயணர் திருமருகோனே ' என்று ஏற்றம் உணர்ந்து ஏத்துவம். (ஹரித்தல் - அழித்தல். நாராயணர் - ஜல சொரூபம் ஆனவர்.)

இச்சை கிரியை ஞானம் எனும் முச்சத்திகளை, கம்பீர சூலமாக்கிக் கரத்தில் அடக்கினார். கால தத்துவத்தைக் காலால் சாய்த்தார். அறிவும் அறியாமையும் கடந்த அறிவு திருமேனியானார் சிவபிரான். அவர் தந்த அற்புத நின்னை,

---

உலகமொரு மேடை; உயர்பொறியே மேளம்;
கலகமனப் பேய்க்கூத்து, கண்டநாள் போதாதோ.

'சூலாதிபர் - சிவஞானர் - யமனுதை காலார் தரவரு... நாதா ' என்பம்.

தந்தைக்கும் குருவான தன்மையால், ' குருநாதா ' என்று கூப்பிடுவம்.

(1) தோதீ! (2) திகுதிகு! (3) தீதி! (4) செகசெக! (5) சோதீ! (6) நடமிடு பெருமாளே! என்று, உமது அருளார்ந்த ஆதாரக் கூத்தில் எழும் நாதபோத சோதி நலம் எண்ணி, சொரூபப் பிரமம், தடத்தப் பிரமமாகித் தாண்டவம் செய்கிறது என்று, அறிந்து மகிழ்ந்து ஆவலித்து அழைப்பம்;

திருமருகோனே! குருநாதா! பெருமாளே! தேண்மையேன் விண்ணப்பம் கேட்டருளும்!

இவ்வுடலில் 72 ஆயிரம் நாடிகள் இருக்கின்றன. அவைகளுள், மூன்று நாடிகள் முக்கியமானவை.

(1) இடா - சந்திர நரம்பு.
(2) பிங்கலா - சூரிய நரம்பு.
(3) *சுழுமுனே - கனல் நரம்பு.*

,ஊயி லிருந்து, முதுகு எலும்புள் இருக்கும் மூன்று துளை வழியாக, நகநக என்று இவைகள் நடமிடுகின்றன.

அறிந்தடங்கி நிற்கும் அந்நாடி தோறும்
செறிந்தடங்கி நிற்கும் சிவம் " என்கிருர் எங்கள் ஔவையார்.

மூலாதாரத்துள் தெய்வக் கனல், அங்குப் பாம்புபோல் சுருண்டு படுத்துக் கிடக்கிறது குண்டலினி. அதற்குப் பரிக்ரக சக்தி என்றும் பெயருண்டு. அதை யெழுப்பத் தூண்டுவதுதான் ஆஸ்திகம்.

உள்ளத்தின் உணர்ச்சி, வெளியில் விரையம் ஆகாதபடி, அதை உள்முகம் ஆக்கும் ஆற்றல், குண்டலினிக்கே உண்டு. அது கருதி ஹடயோகம் செய்து, அக்குண்டலினியை எழுப்ப

உள்ளத்தில் என்றும் வறுமை குடியிருக்க,
கள்ள இன்பம் துன்பமாக் கண்டகதை தீராதோ

முயன்றவர் பலருளர். (ஹ - சூரியன் ; ட - சந்திரன் ; யோகம் - ஒன்றுபடுத்தல்.) அடம்பண்ணும் பிராணனிடம் அடம் பண்ணுவது ஆகாது.

தமிழ்நாட்டின் வெட்ப தட்ப நிலைக்கும், இங்குளார் உடல் நிலைக்கும் அது ஒத்து வராத ஒரு நிலை. நேர்வழி தான் நியாயம்.

வைகறையில் நீராடுவம். நெற்றிக்கும் நீராடுவம். வடக்கு நோக்கி அனுட்டிப்பம். ஆசனம் பலவகை. இயலுமேல் பத்மாசனம். இயலாதேல், சுகாசனமே போதும்.

சில் நேரம் உணர்ந்து பாராயணம் செய்வம். அதன்பின் நிமிர்ந்து, ஜெபமாலை கைக் கொள்வம் ; ஓம் சரவணபவாய நம ; என்று நிறுத்தி, நிதானமாக, காலையில் 1008 ; இயலாதேல் 108 உசிதம்போல் உருவேற்றுவம். மாலையிலும் இதுவே மரபு.

உருவேற்றும் போது ஈர்க்கும் சுவாசம், பூரகம் ; ஈர்த்து உள் இருத்தும் நிலை, கும்பகம் ; சிறிது சிறிதாக விடுகிற நிலை இரேசகம்.

இந்த சாதனையில், ஓடுகாலா யிருந்த பிராணன், அடங்கி மடங்கிச் சமநிலை யடையும். வரவர, அட்சரங்கள் ஒன்றுள் ஒன்று ஒடுங்கும். ஓம்மட்டும், உக்கிரத்துடன் உறவாடும். தூய அந்நிலையில், புற உலகம் தோன்ரு.

ஓம், ஓம், ஓம் எனும் ஒலியெழ எழ, உடம்பின் உள் ளிருக்கும் நரம்புகள் எல்லாமும், ஓம் ஓம் என்றே ஒலிக்கும். இதுவே பக்தி நெறி வழிவந்த சிவராஜ யோகம்.

வாயு அடங்க, மனம் அடங்கும். மனமடங்கும் நிலையே மோனநிலை. குவிந்த பிராணன், சிறிது சிறிதாகக் கும்பகம் ஊதும். கும்பகத்திற்குத் தக்கபடி, கனலும் மூலக் கனல். அவ் வமயம், குதித்து மேல் எழும்பும் குண்டலினி.

மாயை மரமாம் ; மனம்வேர் எனில், உலகம்
சாயா புருடன்போல், சாய்ந்தநாள் போதாதோ

எழும்பும் கனலால், மாபெரும ஆதார கமலங்கள் மலரும். அம் மலர்களில், ஆதார மூர்த்திகள், தம் தம் சத்திகளுடன் தங்கியுளர். வர வர ஒளி வளர்கிறது. காட்சியாகும் மூர்த்தி கள், மேன்மேலும் மவுனத்தைக் கற்பிக்கின்றனர்.

உசசித் துவாரம் பிரமரந்திரம். ஏறிய கனலால், ரந்திரத் துளை திறக்கும். அதன் வழியாக, அமுதம் ஒழுகும். அன்று தான் ஆன்மப் பசி அடங்கும். அந்தக் காலம் வரும்வரை, இச் சோற்றுக் குரம்பையைச் சுமக்க வேண்டியதுதான்.

இவ்வளவும், சாதனையின் இடைக்காலச் செய்திகள். ஆரம் பத்தில், மோகக் காட்டை மனம் மோநது கொண்டு இருந்தது.

அம்மனத்தை, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத சாது சங்கப் பயிற்சியாலும், சாஸ்திர விசாரணையாலும், மூலாதாரத்தினமேல், மேல், மேல் சுடர்கின்ற சுடரை நோக்கு மாறு ஊக்குவித்தேம். அந்நிலையைத்தான,

'மோகாடவி உறுமனம் - மூலா நிலமதின் மேலே சுடர் தனை நாடி' என்கின்றேம்.

வரவர, கணபதியாய், பிரம தேவராய், திருமாலாய், நீல கண்டராய், அநந்தராய், சதாசிவராய், இப்படி யெல்லாம் கருணையொடு திருவுருவைக் காட்டினீர்! பல கோணத்தில் மவுன பர்டத்தைக் கற்பித்தீர்.

'மோன நிலைதனை, நானு வகையிலும் ஓதா, நெறிமுறை முதல் கூறும் லீலாவிதம்' என்னென்று கூறுவன் எளியேன்?

இனி அடியேன விரும்புவது, அஙகஙகே அந்தரங்க சந்திப்பு. அவ்வமயம் தகராகாச அதிரகஸ்யத்தை அடி யேன் அறியச்செய். தகராகாசம் எனும் சிற்றம்பலததில்,

தோதீ திகுதிகு தீதீ செகசெக சோதி தாண்டவம் நடை பெறுவதை அறிவேன. அறிந்தால் மட்டும் போதுமா? துய்க் கும் அனுபவமும் தோன்ற வேண்டுமே!

பொறியடங்கி, மேல்புற்று போர்ப்பத், தவஞ்செய்
அறிவுடைய வான்மீகர் ஆவதுநாம் என்றேயோ

இதயத்தில் தீப தரிசனம்: உச்சியில் முச்சுடர் ஒளி. 'காலும் தீபம், மின்னல், பந்தம், கடிகூர் விரிசு, கதிர்மதி போல் காட்டும் ஒளியாய், இவை யாவும் கடந்தாங்கு அழிவில் பேரொளியாம்' சோதி தரிசனம் நேர அருள்!

ஆதாரங்களைக்கடந்து செல்லச் செல்ல, தூயவுடல், நுண்ணுடல், குணவுடல், கஞ்சுகவுடல், காரண வுடல் எனும் ஆக்கை ஐந்தையும் கடந்து, உயிர் பிரணவ வுடலில் உறவாடும். அதுதான் சாகாக் கலை என்று, அனுபூதிமான்கள் அறிவிக்கின்றனர்.

ஆக்ஞை எனும் ஆறுவது ஆதாரத்திற்கு மேல் உளது நிறை யறிவு; அதற்குமேல் உளது நாத ஒளி. அதற்கும் மேல் உளது பரநாதம்; அதற்கும் மேலுளது பரகலை.

தகராகாச தாண்டவத்தில் உடுக்கைப் பறை ஒலிக்கிறது. அந்த நாதம், அணுக்களை உந்தி உந்தி உருவான உலகம் இது.

திருவடிச் சிலம்பொலியான பரநாதம், சதா கேட்கச் செய். பரை ஒளியை எப்போதும் பார்க்கச் செய்! அச் சிலம்பொலியில் உயிரை லயிக்கச்செய்!

'வாடா மணி ஒளி..........பலமது தருவாயே!'

இந்த அனுபவம் நேருமேல், அருள் ஒளியைக் கண்டோம்! அருள் நாதம் கேட்டோம்! அருளமுதம் உண்டோம்! ஆநந்தம் கொண்டோம் என்று ஆகுமே. அருளார் பிரபோ! உயர்ந்த அந்த சிதம்பர ரகஸ்யத்தை உபதேசித்தருள்! வாடா மணியான பரநாதம், ஒளியான பரவிந்து தரிசனம் எனும் 'பலமது தருக' ஐயா! ஐயா என்று வீழ்ந்து வணங்கி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

ஆமையுறுப் பைந்தும், உடலுள் அடக்கல்போல்,
தீமைப் பொறிகளின திமிரடங்கல் என்றேயோ

வெவ்வினை வாழ்வு

' (கி. வா. ஜ.)

முருகனுடைய திருவருளைப் பெறத் தமக்குத் தகுதியில்லை யென்று கூறிய அருணகிரிநாதர், "அப்படியானால் அவனருள் பெருமலே பிறப்பும் இறப்பும் அலைக்கத் திரிவது தானா நம்முடைய நிலை?" என்று எண்ணினார். "இந்த நிலை மாற வேண்டும். இப்படி வீணாக உழலுவது ஏற்றதன்று" என்று நைந்தார். முருகனைப் பார்த்து, "அடியேன் இவ்வாறு அலைவது தகுமா?" என்று முறையிடலானார்.

இந்த வாழ்வு நமக்கு உண்டானதற்குக் காரணம் நாம் முன்னைப் பிறவிகளிற் செய்த வினைகளே. பாவமும் புண்ணியமுமாகிய இரண்டு வினைகள் நம்மை மீண்டும் மீண்டும் பிறவியிற் புகுத்துகின்றன. வினை உள்ளவரைக்கும் இந்த வாழ்வு இருக்கும். வினை தீர்ந்தால் இவ்வாழ்வு முற்றுப்பெறும்.

வினைகள் மூன்று வகைப்படும். சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பன அவை. பலபிறவிகளிலும் செய்து செய்து ஈட்டிய பெருமூட்டையே சஞ்சித வினையாகும். அந்த மூட்டையினின்றும் ஒரு பகுதியை இந்தப் பிறவியிலே அனுபவிக்கக் கொண்டு வருகிறோம். அதுவே பிராரப்த வினை. இந்தப் பிறவியில் பல செயல்களைச் செய்து புதிய வினைகளை ஈட்டுகிறோம். அது ஆகாம்யம் எனப்படும். பிராரபத வினை முடிநதால் இந்தப் பிறவி முடியும். பழைய மூட்டையும் புதிய மூட்டையும் இருப்பதனால் மீட்டும் பிறக்கிறோம். ஞானிகள் இநதப் பிறவியிலே பற்றறுத்துத்

புலனைந்தும், என்றும் சிவசிலை தாள்பூண்டு,
நலமாரும் இன்பவளம், நண்ணுவதும் என்றேயோ

தாம் செய்யும் செயல் யாதுமற்று இருப்பார்கள். குரு நாதன் திருவருள் பெற்றவுடன் சஞ்சித வினைத் தொடர்பு போய்விடும். ஞானம் பெற்றால் ஆகாமிய வினைக்கு இட மின்றி ஒழியும். பிராரப்தத்தைமட்டும் அநுபவித்துத் தீர்க்க வேண்டும். அதையே ஊழ் என்றும் விதியென்று சொல் கிறோம்.

முன்னை வினைக்கு ஏற்ப இந்த வாழ்வு நமக்கு அமை கிறது. புண்ணியம் பாவம் என்னும் இரு வினைகளின் பயனாக இந்த மனித சரீரத்தைப் பெறுகிறோம். இந்த உடம்பு நிலையாதது ; வாழ்வும் நிலையாதது ; வினை ஒழிந்தால் ஒழிவது. ஆதலின் மெய்யானது அன்று.

இதனை உணராமல் இந்த வாழ்வே சதமென்று எண்ணி, மேலும் மேலும் பற்றை மிகுதியாக்கிக் கொண்டு அலை கிறோம். இந்தப் பிறவி பெற்றதன் பயன் இனிப் பிறவியே வாராத வகையைத் தேடிக்கொள்வதே. அப்படியின்றி மீட் டும் மீட்டும் ஆசையைப் பெருக்கி வினைகளை ஈட்டி இன் னும் பலபல பிறவிகளுக்கு அடிகோலுகிறோம். அதனால் பல பிறவிகளை எடுத்து உழலுகிறோம்.

எது மெய் என்பதை நாம் சிந்திப்பதில்லை. இந்த உடம் புக்கு மெய் என்ற பெயர் இருந்தாலும் இது மெய்யான தன்று. கரிய ஆட்டை வெள்ளாடு என்று சொல்வது போன்றது இது. இதனை எதிர்மறை இலக்கணை என்று சொல்வார்கள்.

இறைவன் மெய்யான பொருள் என்பதை மறந்து இந்த வாழ்வே மெய்யென்று வாழ்கிறவர்களுக்கு மேலும் மேலும் பிறவிகள் தொடரும். பிறவியிலே கிடைப்பது துன்பந்தான்

நாமம் செபியாமல், நாள்அவமே யாக்கும்
தீமைதவிர் தெய்வ ஒளி, தெரிசிப்பது என்றேயோ.

" பிறந்தார் உறுவது பெருகிய துன்பம் "
என்பது மணிமேகலை.

வினைகள் புண்ணியம் பாவம் என இரண்டு பிரிவுகளாக உள்ளன. அவற்றை நல்வினை, தீவினை என்று சொல்வர். இரண்டு வினைகளும் பிறப்புக்கு ஏதுவாவன. ஆதலால் திருவள்ளுவர் அவற்றை, " இருள்சேர் இருவினை " என்று கூறுவார். நல்வினை பொன் விலங்கைப் போல்வது ; தீவினை இரும்பு விலங்கைப் போல்வது. இரண்டும் விலங்குகளே.

" ஏழையின் இரட்டைவினை ஆயதோ ருடற்சிறை " என்று அருணகிரிநாதர் திருவகுப்பில் பாடுகிறார். இந்த உடம்பாகிய சிறை இரண்டு வினைகளால் அமைந்ததாம். ஆகவே, வினையொழியும் வகையில் நாம் முயற்சி செய்ய வேண்டும். வினை ஒழியாவிடின் பிறப்பு ஒழியாது. பல பல பிறவிகளை எடுத்து உழன்று கொண்டே இருக்க வேண்டும்.

" எம்பெருமானே. இந்த வெய்ய வினையால் வந்த வாழ்வை மெய்யே என எண்ணி இனிதாக மேற் கொண்டு அடியேன் பிறவி பல பெற்று உழல்வது தகுமோ ! ஐயோ ! நான் என் செய்வேன் !" என்று அலறுகிறார் அருணகிரியார்.

மெய்யே எனவெவ் வினைவாழ் வைஉகந்து
ஐயோ ! அடியேன் அலையத் தகுமோ ?

அலையாமல் நல்ல வாழ்வுபெற வேண்டுமானால் எது மெய்யான பொருளோ அதை அடைந்து நலம் பெற வேண்டும். வெவ்வினை தீர நோற்க வேண்டும். அப்போது தான் ' பிறவி யலையாற்றில் உழலாத ' நிலை கிடைக்கும்.

ஊன் றுகோல் ஆகி, நல்லோர்க்(கு) உதவநீ, இவ்வளங்கள்
ஏன் றுகொள் என்றிறைவன், ஈர்ப்பதுதான் என்றேயோ.

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தேய ஒருகோடி
வெள்ளங்கா லம்திரிந்து விட்டேனே!"

என்று இந்த அலைச்சலினால் உளம் வெதும்பிய பட்டினத்தார் புலம்புகிறார்.

"இவ்வாறு அடியேன் அலைவது தகுமோ?" என்றார் அருணகிரியார். இந்தக் கேள்வியை முருகனைப் பார்த்துக் கேட்கிறார்.

முருகன் எத்தகையன்? அதை அடுத்தபடி சொல்கிறார்.

---

6. நக்கீரர்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

[2-ம் பகுதி நக்கீரரும் பூதமும்]

அதற்கு "அன்புடையீர்! அஞ்சன்மின்; இவ்வுலகில் உள்ளோர் இன்பம், துன்பம் இரண்டையும் சமமாகத் துணிதல் வேண்டும் என்பது நீர் அறியீர் கொல்?" என்று கூறி, எம் பெருமான் கந்தவேளை,

"பன்னிருகட் கற்பகமே! பரங்கருணைப்
பாற்கடலே பரமன் பெற்ற
நன்னிதியே! நல்லடியார் நற்றுணையே!
நங்கை வள்ளி நாயகா! நின்
பொன்னடியே துணைகொண்டு வாழ்தமியோம்
பூதத்தாற் பொறிக லங்கி
இன்னலுற்றோம் எமைஆள்வான் இத்தருணம்
வந்தருளாய் எந்தாய் எந்தாய்."

பாவம், துடுக்குரையால் பற்றுமெனல் எண்ணாத
நாவர் உறவகன்று, நான் உய்வ(து) எக்காலோ.

"அடியவர்தம் பெருவாழ்வே! ஆறுமுகப் பெருமானே!
அமரர் வாழ்வான்,
வடிசுடர்வேல் கரத்தெடுத்த மாணிக்க
மாமலையே! மாசிலாவெண்
பொடிபுனையுந் திருமேனிப் புண்ணியா!
பூதத்தாற் பொறிகலங்கி
இடருடையோம் எமைஆள்வான் இத்தருணம்
வந்தருளாய் எந்தாய் எந்தாய்."

"கொழிதமிழுக் கினிதிரங்கும் குணக்குன்றே!
குகாயநமோ என்று போற்றி,
வழிபடுவோர் வினைதீர்க்கும் அருமருந்தாய்
எழுந்தருளி, மாறு இன்பம்
பொழிகருணை மாமுகிலாம் புண்ணியா!
பூதத்தாற் பொறிக லங்கி
இழிவடைந்தோம் எமைஆள்வான் இத்தருணம்
வந்தருளாய் எந்தாய் எந்தாய்."

(சே.பு. 328 - 330)

"'குகாய நமோநம' என்று போற்றி இறைஞ்சி ஆறெழுத்தை உரு எண்ணி, கரங்குவித்து, ஐம்பெரும் பூதவாயில் அகப்படும் உயிரை மீட்டுத் தனது திருவடி நீழலில் சேர்க்கவல்ல பெருமானுக்கு இந்த ஒரு பூதத்தினின்றும் நம்மை மீட்பது அரிதோ!' என நினைந்து நெடுவேற் செம்மலின் பன்னிரு செவியுமாரப் பருகமுதாகி, ஓதில் உன்னிய உன்னியாங்கு உதவுவதாகிப் பாவுள் முன்னுற வந்து நிற்கும் 'முருகாற்றுப்படை' என்னும் பாடலை மொழிந்தார். வள்ளி 'கன்னலும், அமுதும், தேனும் கைக்கும் இன் தீஞ்சொல் மாற்றித் தன்னிகர் புலவன் கூறும் தமிழ்ச் செவி தாழ்த்துக் கேளா, அங்கிலை

மாடலன், கோவலன் மாண்டான் எனப், பல்லோர்
வீடினர், இப்பாவம் வீழ்வதெவர் மேலேயோ.

மனங்களிப்புற்று அறுமுகம் படைத்த கோமான் ' ' அஞ்சல்! அஞ்சல்!' என்று எழுந்தருளிக் கதாயுதத்தால் அப் பூதத்தை நொறுக்கி வீழ்த்திக் குகைவாயிலைத் திறந்து ஆயிரவரையும் மீட்டனர். நக்கீரர்முதல் யாவரும் ' சரவணபவா ! நமோநம ' என்று கூறி வீழ்ந்து வணங்கிப் பெருமானைத் தொழுதனர். நக்கீரர்,

" ஐயசர ணஞ்சரணம் ! அமலசர ணஞ்சரணம் !
அறுமுகவி நோத சரணம் !
பையரவ ணிந்தசிவ சங்கரன்இ டங்குலவு
பரைமகிழும் இளைஞ ! சரணம் !
மையனைய குழலிகுற வள்ளிகுஞ் சரிதழுவி
மகிழுமண வாள சரணம் !
வெய்யபூ தந்தின இருந்தஎளி யோங்கள்தமை
விடுவித்த விமல சரணம்."

[தின-தின்ன.] (சே.பு. 337)

என்று கூறி வணங்கினர். நல்லோர்க்குப் பெய்தமழை எல்லோர்க்கும் ஆவதுபோல், " சொல்வாணர் கோப்பொறுப்பில் எல்லோரும் இன்னலற்றார் " (சே.பு. 339). கீரர் தவிர பிறர் தத்தம் பதியை அடைந்தனர். அப்போது முருகவேள் " என் அருமை அன்பா ! நீ, கன்னலனைய தமிழ், சொன்னதினி துவந்தேன், நின் அவா என்ன ?" என்றார். (சே. பு, 341) நக்கீரர் " எந்தையே ! நாயடியேன், நுந்தை நுதல்விழியால், வந்த வினையால் வாடி, வெந்துயரம் மீக்கொண்டேன் ; (சே. பு. 342) அவர் நீ கயிலை காணில் உன் பிணி நீங்கும், துயரம்போம் ' என்றார் ; ஆதலால் பெருமானே ! எனக்கு உய்யும் வழி கூறி நின் மாசிலாச் சிற்றடி நீழலில் அடியேனைச் சேர்த்தருளுக " என வேண்டி வணங்கினர். முருகவேள் ' எந்தையார் கயிலை என்றுரே யொழிய வடகயிலை

நல்லோரைச் சீறினால், நாணி அவர் நீங்குவரால் ;
வில்விதுரன் துரியனைக்கை விட்டதுபோல் ஆகுமரோ.

எனத் திசை யுணர்த்திக் கூறவில்லை. ஆதலால், தென்கயிலை (தக்ஷிண கைலாசம்) ஆகிய காளத்தியைக் காண்டலும் உன் பிணி ஒழியும் ; நீ இப் பொய்கையின் நீரில் மூழ்கில் சீகாளத்தி சேர்வாய் ; உன் பிணி, துன்பம் யாவும் ஒழியும்'' எனக் கூறி மறைந்தனர்.

6. நக்கீரரும் சீகாளத்தியும்

அங்ஙனமே பொய்கையில் மூழ்கி சீகாளத்திப் பொன் *முகலி ஆற்றில்,* உதயகிரியில் ஞாயிறு எழுவதுபோல எழுந்தனர் கீரர். அதிசயித்தனர். நோயும் தொலைந்தது. வானோர் பூமழை பொழிந்தனர். இந் நிகழ்ச்சி ''தந்தையார் ஒரு புலவரின் (சுந்தரரின்) தமிழுக் கிரங்கி ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் வரச்செய்தார். மகனார் ஒரு புலவரின் (கீரரின்) தமிழுக் கிரங்கி குளத்தில் மூழ்கிய அவரை ஆற்றில் எழச்செய்தார்.'' என ஒரு அற்புத விளக்கத்தை நமக்கு ஊட்டுகின்றது. ஆதலால் முன்னவனே முன்நின்றால் முடியாத பொருளுளதோ ?! பொன்முகலி ஆற்றில் எழுந்த கீரர் பெருமான் மகிழ்ச்சி கொண்டு,

'' அரகர வேல்மயில் வேல்மயில் என்பார்
ஆடுவர் ஓடுவர் ஐயன தருளைப்
பரவுவர் வேல்மயில் வேல்மயில் என்று
பார்மிசை விழுவார் எழுந்து நடப்பார்
கரமல ரோச்சுவர் கவிதை பகர்ந்தோர்
காலை மடித்தொரு காலில் நடப்பார்
சிரமிசை அங்கை குவித்து நடித்துச்
செயசெய வேல்மயில் என்று நடப்பார்.''

'' பம்புவர் சுழல்வார் சிரிப்பார் களிப்பார்
பரிந்து நடந்து பல்லாண்டு பகர்ந்து
கும்பிடு வாருளம் குழைந்து திகைத்துக்
குகாய நமோஎனக் கொக்கரித் தெழுந்து

வாய்மைதனைக் காக்க, வாழும்உயிர் போகவிட்ட
தாய்மை, தசரதன்பால் தங்கிவளம் எய்தியதே.

தும்பி பறப்பார் அரகர வேல்மயில்
துணையெனப் பலகால் முழக்கி நடப்பார்
அம்பிகை பங்கவன் மேவு தென்கயிலை
அடைந்தனன் அடைந்தனன் என்று குதிப்பார்."

"மதுர நறுந்தமிழ் இசைகள் பகர்ந்துன்
மாதரின் மயங்குவர் மாறி எழுந்து
குதுகலித் தரஹர வேல்மயில் என்று
குடுகுடென் றோடுவர் ஓடி மடங்கி,
நதிமதி சூடிய நாத நமோநம
நமப்பார் வதிபதே என்று பகர்ந்து
கதியருள் இறைவளர் தென்கயி லாயம்
கண்டனன் கண்டனன் என்று குதிப்பார்."

[சே. பு. 353 - 355]

இங்ஙனம் ஆனந்த பரவசராய் எழுந்து வந்த கீரர், "நறுந் தமிழ்வாணர் பிரானே! வந்தருள், வந்தருள்" என்று காளத்தி அந்தணர் வணங்கி எதிர்கொள்ள, ஆலய வாயில் அடைந்தனர். அடைந்தவர் காளத்தி நாதரின் பொன்னடி போற்றி, உடல் விதிர்ப்ப, உரோமம் பொடிப்புறக் கமலக் கண்களில் வெள்ளம் புரண்டெழ, "கயிலைபாதி காளத்தி பாதி" என்னும் அமுததாரைப் பெருக்கெடுத்த அந்தாதி, காரெட்டு, 'கண்ணப்ப தேவர் திருமறம்,' 'திருஎழு கூற்றிருக்கை,' 'பெருந்தேவ பாணி,' 'போற்றிக் கலிவெண்பா' என்னும் நூல்களைப் பாடி, ஸ்ரீகாளத்தியிற் பலநாள் தங்கி, ஒருநாள் சிவபிரான், உமை அம்மை, ஐங்கரன், முருகவேள் ஆகிய இவர்கள் பொலிவுறும் ஒரு பெருஞ்சோதி தோன்ற அச் சோதியிற் கலந்தனர்; பூமழை தூர்த்தனர் வானவர். இதுவே ஸ்ரீ காளத்திப் புராணத்திற் கண்ட கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு. (தொடரும்)

ஆதார மான ஒழுக்கந் தனையென்றும்,
சேதாரம் செய்யார், சிவமாச் சிறப்பாரே.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

(வித்வான் வே. சிவசுப்பிரமணியன்,
விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி மயிலம்.)

" தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி
மயர்வு இலாததோர் பொருள் அது கருதலும் "

என்று மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார். கலக்கமற்ற தெளிந்த ஞானப் பெரும்பொருளையே தெய்வம் என்னும் பெயரால் குறித்தனர் என இங்கே உணரலாம். தெய்வத் திறத்தில் ஈடுபட்டுப் பேசிய பெருமக்கள் பலர். புறக்கண்ணாலும் அகக்கண்ணாலும் தெய்வத்தைக் கண்டு - களித்துப் பேசிய ஞானிகள் பலர் நம் நாட்டின் அகத்தும் புறத்தும் நிலவி வந்திருக்கிறார்கள். இன்றும் நேற்றும் பன்னூறாண்டுகளுக்கு முன்பும் நிலவி வந்த அந்த ஞானப் பெருமக்களுடைய சரித்திரம் நம்மால் ஓதி உணரத் தக்கதாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தமிழும் தெய்வமும் வேறல்ல. " ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் " என்று சேக்கிழார் பெருமான் கூறுவர். தெய்வத்தால் தோன்றிய தமிழ், தெய்வத் தன்மையுடைய தமிழ், தெய்வமாகிய தமிழ், தமிழாகிய தெய்வம் என்று எப்படி வேண்டுமானாலும் நினைத்துப் பார்க்கலாம். தமிழுக்கும் தெய்வத்துக்கும் உள்ள தொடர்பு நெருப்பும் சூடும் போன்றது. தமிழ்ப் பாடல்களில் தெய்வம் உள்ளும் புறம்புமாய்க் கலந்துள்ளது. சங்கப் பாடல்களைப் பற்றிச் சிலர் வேறு விதமாய்க் கருதுவதுண்டு. சங்க இலக்கியப் பாக்களிலும் சிவன், முருகன், திருமால், பலதேவன் முதலினோர் தெய்வமணம் ஆங்காங்கு

ஓராக் குறையால், உணர்விழந்து கல்லான
சீரார் அகலியைச், சிந்திப்பார் சீரியரே.

வீசுவதும், ஊழும், மறுபிறப்பும், இருவினைப் பயனாகிய இன்ப துன்பமும் ஆகிய தெய்வத்திறம் வற்புறுத்தப்படுவதும் காணலாம்.

சங்க இலக்கியங்களின் உள்ளீடாக மறைந்து கிடக்கும் தெய்வத் திறத்தை வெளியாக்கிப் பேசியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவர்.

இன்றைக்குச் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் தொண்டைநாடு எனத் தற்போது வழங்கப் படும் பகுதியில் இவர் தோன்றியவராதல் வேண்டும். தொண்டைமண்டல சதகத்தில் "பாரதம் பாடும் பெருந் தேவர் வாழும் பழம்பதிதான, மாருதம் பூவின் மணம் வீசிடும் தொண்டை மண்டலமே ' என்னும் பாடல் இதனை வலியுறுத்துகிறது—

இவ்வாறு தொண்டை நாட்டிலே பிறந்த இந்தப் பெரி யாருக்கு என்ன பெயர் வைத்திருப்பார்களோ? அவரது திருமேனியில் சுடர்விட்ட தெய்வத் தன்மையைக் கண்டு அவருக்கு இட்ட 'தேவனார்' என்னும் பெயரே அவருக்கு நிலைத்தது. நாளாக ஆக இவரது அறிவின் பெருமையும் குணத்தின உயர்வும் உலகிற்கு விளங்கிற்று. மேலும் மேலும் அறிஞர்களும் பெரியோர்களும் இவரைச் சூழ்நது பாராட்டலாயினர். அதனால் தேவனார் "பெருந்தேவனார்" எனப்பட்டார்.

இவர் தமிழறிவுடன் வடமொழியிலும் திறம்பட நிரம்பிய வராக ஆயினர். இவர் காலத்தில் இத்தகைய இரு மொழிப் புலமையில் சிறந்து நின்றவர்களில் இவர் மிகவும் பாராட்டப் பட்டார் என்று ஊகிக்கலாம்.

தமிழும், வடமொழியும் நன்கு கற்றிருந்த புலவர் பெரு மானாகிய பெருநதேவனார் இலக்கிய வுலகில் தாம் பெற்றி

சந்திவர் தனைதுறந்து, தர்மம் மறந்தவர்கள்,
சிந்தித்தால், முன்னைச் சிறப்பெய்தல் நிச்சயமே.

ருந்த புலமை நலத்திற்கும், தெய்வத் திறத்தில் தம் உள்ள ஈடுபாட்டிற்கும் எடுத்துக் காட்டாக அரிய இலக்கியப் பணி ஒன்றைச் செய்யத் தொடங்கினார்.

இவர் காலத்தில் யாரும் செய்யாத பெரும்பணி அது. வடமொழியில் வியாசபகவான அருளிய மஹாபாரதத்தைத் தமிழில் உரைநடையும் ஆசிரியப்பாவும் வெண்பாவும் விரவி வரப் பாடினார். அற்புதமான இவரது தமிழ்ப்பாரதம் கண்ட பெருமக்கள், இவரை அசசெயற்கருஞ் செயலினாலேயே "பாரதம் பாடிய பெருந்தேவனார்" என அழைக்கலாயினர். இவர் பாடிய பாரதச செய்யுட்களில் ஒரு சில தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரையிலும், யாப்பருங்கல விருத்தியிலும் உதாரணமாக வந்துள்ளன.

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்துப் பாடப்பெற்ற "பாரத வெண்பா" என்னும் நூலொன்று உண்டு. சங்க காலத்திருந்த இவர்க்கும் அதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நிற்க.

தெய்வப் புலமையில் ஊறித் திளைத்த இச்சான்றோரது உள்ளத்தில் வேறோர் அரிய எண்ணம் எழும்பியது. சங்க நூல்களாகிய எட்டுத் தொகையை இவர் நோக்கினார். இவற்றின் முகப்பில் இறைவணக்கச செய்யுட்கள் இலலாமல் இருப்பது இவருக்கு மனவருத்தத்தை அளித்தது.

ஆண்டவன உலகெங்கும் நிறைந்திருந்தாலும் அவனுக்குத் திருக்கோயில் கட்டி தனியே வைத்து வழிபடும் நன்மக்கள் வழியினரல்லவா இவர். அதனால் சங்க இலக்கியம் முழுவதும் தெய்வமணம் கமழினும் தனியே அவற்றின் முகப்பில் கடவுள் வாழ்த்துச செய்யுட்கள் அமைதல் வேண்டும் எனக் கண்டார். உடனே கடவுள் வாழ்ததுச் செய்யுட்களைப் பாடி முடித்தார். தெய்வத்தையன்றிப் பிறிதெதையும் பாடாதவர்

வேதக் குறைகூறி வேதியரை நிந்திக்கும்
ஏதர் முகந்தன்னில் என்றும்விழிக் கொண்ணாதே !

இவர் என்று கூட இவரைக் கருத இடம் தருகிறது. கடவுள் வாழ்த்துச் செய்யுளைத் தவிர வேறு செய்யுட்கள் இவரால் செய்ய பட்டதாக இல்லாமையே இவரது ஞானவரம்பின் தெளிவை எடுத்துக் காட்டுகிறது பாடுவதெல்லாம் பரமனைப் பாடுவதாக இருத்தல் வேண்டும் என்று தெளிவு கொண்டவர் இவர் என்று நினைக்கலாம்.

அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந் தொகை ஆகிய ஐந்து தொகை நூல்களின் முகப்பிலும் இவர் எழுதிய கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் அழகு செய்கின்றன.

அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு ஆகிய மூன்றிலும் சிவபெருமானுக்கு வணக்கம் கூறுகிறார். நற்றிணையில் திருமாலையும், குறுந்தொகையில் முருகப் பெருமானையும் பரவுகிறார். இவற்றை நோக்கும்போது எல்லாத் தெய்வ வணக்கமும் முடிவில் ஒன்று படுவனவே எனறு கொள்ளும் சமரச சன்மார்க்க நெறியினர் இவர் என்று சொல்லத் தோன்று கிறது.

ஆண்டவனது திருவுருவப் புறக்கோலத்தையும், அகக் கோலமாய தத்துவ ஞானத்தையும் இவரது கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் நமக்கு அறிவிக்கின்றன.

உருவத் திருமேனியைப் பற்றிச் சொல்லுகின்ற இவர், அருவத் திருமேனியாகிய ஆண்டவனது அளப்பரிய ஆற்றலைக் கூறுவதும், இறையருள் ஞானம் கைவரப் பெற்ற இவரது ஞான உள்ளச் சிறப்பினை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இவரது கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் நமக்கு அறிவிக் கும் அரும்பொருள்களைக் காண்பதன் மூலம் இவரது ஞானத் தெளிவில் நாமும் பங்கு கொள்ளலாம். (தொடரும்)

துப்புரவாம் கப்பி துய்கக அளித்தாலும்
குப்பைமேட்டுப்புத்தி கோழிக்குப் போகாதே.

உண்மையும் போலி உருவமும்

[ரஸபதி]

இன்ப ஒளி, இதயத்தில் எழ வேண்டும்; அந்த இன்பத்தின் பெயர் ஹிதம். ஹித உயிர்ப்பே மதம். சித்த சுத்தி, உத்தம சீலம், உருகும் உள்ளம் மூன்றும் உண்டானல், ஆன்மா பரத்திற் கலக்கும் பக்குவம் எய்தும். மாபெரும் அவைகளைக் கற்பிக்கிறது மதம்.

" திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே !"

எனும் திருமூலர் திருமந்திரம், இங்கு நம் நினைவில் எழுந்து நிழலிடுகின்றது.

அம்மா! அம்மா என்று, குழந்தை அழைக்கிறது. ஏண்டா கண்ணே! என்று, தாய் எடுக்கிருள். இடுப்பில் ஏந்துகிருள். கொஞ்சிக் குலவுகிருள். பாராயணம் செய்யும் பக்தர்கள், புனித குழந்தையைப் போன்றவர்கள்; தாய்போல் பரிந்து, அவர்களைப் பகவான் தாங்கிக் கொள்கிருன். இது, பக்த விஜயத்தில் பார்த்த செய்தி. அனுபவங்கள், எவர் வாழ்க்கையிலும் ஏராளமாக இருக்கின்றன.

பெற்றவளின் கைப்பிடித்து நடக்கும் பிள்ளைகளைப் போன்றவர் ஞானிகள்; பக்திக்கு வசப்படுகின்ருன் பரன்; ஞானமோ அவனைத் தாளுக வந்து தழுவுகிறது. ஊன்றி இந்நுட்பத்தை உணர்ந்தால், அரிய சமய வாழ்வை அறிந்தவர்கள் ஆவோம்.

இவைகட்கு மாருனது, பொறிகளின் வழியிற் பிறக்கும் வெறியின்பம். அதனிலேயே அதிகம் மயங்கும் அறிவினர்,

---

ஒப்பிலாப் பன்னூல் ஓதிடினும், ஞானமொழி
செப்பிடினும், கீழ்க்குணம் கீழ்மையரைச சேருமரோ.

புனித சமயப் போர்வையுள் புகுந்து, எம் சமயம் ஏற்றம் ஆனது; மற்றவர் சமயம் மட்ட ரகம் என்று, மல்லாடுவதும் சொல்லாடுவதும் தர்ம விரோதம்.

" உள்ளத்தே நிற்றி யேனும், உயிர்ப்புளே வருதியேனும்,
கள்ளத்தே நிற்றி யம்மா ! எங்ஙனம் காணு மாறே ?"

என்று, சிவ சீவ அனுபவத்தைச் சிந்திக்கிறது தமிழ்மறை.

" நாகத்து அணையானை, நாள்தோறும் ஞானத்தால்
ஆகத்து அணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை,
மாகத்து இளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான்தன் பாதம் பணிந்தேனே !

என்று, ஆழ்ந்த அனுபவங் கொண்டு, ஆநந்தித்து ஆழ்கின்றார் ஆழ்வார். உயிரும் உடலும்போல், சிவ விஷ்ணு மூர்த்தங்கள், எந்தக் கோயிலிலும், எந்த நூலிலும் இருப்பதனை எண்ணி மேலோர் ஏத்தினர். ஆகமங்களில் தோன்றும் அபேத செய்தியை, பேதமாக்கிப் பேசுவது, பிணங்கி நல்லோர் பிரிந்து போம்படி, விதி மதியிற் புகுந்து செய்யும் விபரீதம். சிவத்தை நிந்திக்கும் வைஷ்ணவர், அகத்தால் சைவர்; புறத்தில் மாலடியார். இப்படியே திருமாலை நிந்திக்கத் தெரிந்த சைவர், அகத்தால் வைஷ்ணவர்; புறத்தால் சைவர். விபரீதங்கள் பல இவர்களால் விளைவதும் உண்டு.

கற்ற சைவர் ஒருவரை, காண வந்தார் ஒரு அன்பர். வாருங்கள்; தங்கள் பெயர் யாது? என்று வினவினர் புலவர்.

சிவராமலிங்கம் ! என்றார் வந்தவர்.

அமுக்கு! அப்படியே இருபுறமும் நெருக்கு! என்று எழுந்து குதித்தார் சைவர்.

வந்தவர் விவரம் தெரியாது விழித்தார்.

வேகவைக்கும் காமத்தை, வீழ்த்தவழி ஏதென்னில்,
தாகமிக்கு ஞானிகளின், தாள்சார்ந்து வாழ்வதுவே.

முன்னே சிவம் ; பின்னே இலிங்கம் ; இடையில் இராமன். இருபுறமும் நெருக்கினால், இராமன் இல்லாது போவான் என்று, விழித்தார் முன் சைவர் வியாக்யானம் செய்தார்.

வைணவப் புலவர் ஒருவர் மாளிகை வாயிலில், வந்தார் ஒரு அடியார். இருந்த திண்ணையில் ஏறி யமர்ந்தார். புலவர் மகள், வாயிலிற்கு வந்தாள். அவ்வளவுதான். ஐயோ அப்பா! என்று அலறினாள். உள்ளிருந்த புலவர், ஓடோடி வந்தார். என்ன செய்தி அம்மா! என்று எதிர் நின்றார்.

அப்பா! அதோ இருக்கிறானே, அவன் என்ன சொன்னான் தெரியுமா?

என்னடா செய்தி? என்ன அம்மா சொன்னான்? வீற்றிருந்த அடியார், விழித்தார். சொல்லத் தகாத வார்த்தையை, அவன் சொன்னானே அப்பா!

ஏதோ கெட்ட வார்த்தை சொல்லி யிருக்கிறான் என்று நம்பிய புலவர், அந்த அடியார் தாடையில் ஓங்கி அறைந்தார்.

அடிபட்ட அடியவர், எதிர்ப்புக் காட்டிலர். சிவசிவ! என்று எழுந்தார்.

கேட்டாயா அப்பா! மறுபடியும் சொல்கிறான்! என்ன துணிச்சல் என்று, எழும்பிக் குதித்தாள் மகள்.

உண்மை யுணர்ந்த புலவர், அவன் கிடக்கிறான்; நீ வா அம்மா என்று, மகளுடன் மாளிகையுள் புகுந்தார். என்ன சம்பிரதாயம் இது! எவ்வளவு மோசமான போதனை, இளம் பெண் மண்டையில் ஏறி யிருக்கிறது! இத்தகைய வேதனை யான கதைகள், எவ்வளவோ இருக்கின்றன.

உங்கள் மாதவப் பெருமாள், எங்கள் சிவனை மாடாய்ச் சுமக்கிறான் என்றார் ஒரு இளஞ் சைவர்.

பாவப் பொறுமை, பற்றுமல் வாழவழி,
தேவன் சொருபம், இஞ் ஞாலமென்று தேர்வதுவே.

எங்கள் பெருமான் கால் கழுவிய நீரை, உங்கள் பெருமான் கங்கை என்று சுமப்பது தெரியாதோ? என்று, பொங்கி மகிழ்கிறார் ஒரு போலி வைணவர்.

இப்படி உணர்வு இருளடைந்து, வாதத்தில் மோதும் இரு திறத்தரும், தரித்திர நாஸ்திகத்தின் தந்தைகள் என்று பேசுவதில் பிழையுளதா?

இத்தகையவர்களை எண்ணி, இதுதான் ஆஸ்திகம் என்று எவரேனும் பேசினால், அவர்கள் அறிவுலகத்தின் பிள்ளைப் பிராயத்தர் என்று இயற்கை யுலகம் எண்ணுகிறது.

இவர்கட்கு மாறான வாழ்க்கையர் சிலர். அவர்கள் தரிக்கும் சமய சின்னங்கட்கு அர்த்தமே யில்லை. சமயப் பாடல்களைத் தம் பாடலாக மாற்றிப் பாடும் புதுயுக புத்தி சாலிகள்போல், சமய சின்னத்தைக் கருவியாக்கி சாணக்கிய நாடகம் ஆடுவாரும் பலருளர். அவர்களை ஆஸ்திகர் என்று தப்புக் கணக்குப் போடுவது தவறு.

பேத்தனூர் என்பது ஒரு கிராமம். அப்பதியில், சிவா என்று ஒருவர் இருந்தார். அவர், தந்தையின் வற்புறுத்தலுக்கு அஞ்சி, விபூதி தரித்தவர். அதனுடன், கல்வியும் சிறிது கற்றவர். கேட்கத் தகாத, தெய்வ நிந்தையான விரிவுரைகளைக் கேட்டவர். இவ்வளவும் அவர் இளம்பருவச் செய்திகள்.

இப்போது அவர் ஒரு இல்லறத்தார். மனைவி பெயர் அல்லி. அவளையும், மற்றவரையும், அவர் சிவா என்றே அழைப்பார். ஊரை ஏய்க்க, இது உரியவழி என்று உணர்ந்தார்.

பெருமாள் கோயில் மாடு ஒன்று, எங்கும் திரிந்து இருந்தது. கேள்விமுறை இல்லை. அதை அறிந்தார். ஒருநாள் அதைக் கொண்டு சென்றார். குளம் ஒன்றில் குளிப்பாட்டினார்.

நீடும் ஒழுக்க நியதிதனைக் காத்திட்ட
வீடும் ஆகி,யாம் என்று விளங்குவமோ?

மேய விட்டார். மாலையில் ஓட்டி வந்தார். வீட்டில் தன் கட்டிலுக்குப் பக்கத்தில் கட்டினார். நாள்தோறும் இந்த நடை. அவர் உபசரிப்போ என்னவோ, அவர் துணைவிபோல், கொழு கொழு என்று காளை கொழுத்தது.

சாணி நாற்றம், கோமய வாசனை, கொசுக்கடி இவைகள், பூவை அல்லிக்குப் பொறுக்க முடியவில்லை. நாள்தோறும், இது குறித்து வள்வள் என்று வாய் திறந்தாள்.

சிவா! ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன். நாளை வியாழக்கிழமை. காளையை விற்றுவிடப் போகிறேன் என்றார்.

அதுதான் புத்திசாலித்தனம். ஆண்பிள்ளை நீர் என்பதை, நாளைக்குப் பார்த்துவிட்டால் போகிறது என்று, அலட்சியமாக் கூறினாள் அல்லி.

கடைத் தேங்காயைத் திருடி, வழிப்பிள்ளையார்க்கு உடைத்து வழிபட்டாராம் ஒருவர். கோயில் மாட்டைக் *கொள்ளை யடித்து, விற்கத் துணிந்த வீரசைவர்* இவர். மறுநாள் விடியற்காலம். கட்டுச் சாதம் அக்குளில். காளையின் கழுத்துக் கயிறு கையில். புறப்பட்டார். பதினாறுகல் தூரம் நடந்தார். பகல் மணி பன்னிரண்டு.

அயர்ச்சி அதிகரித்தது. எதிரில் ஒரு குளம். அதன் பக்கத்தில் ஒரு ஆலமரம். அதனை அணுகினார்.

என்ன வியப்பு! மடிபெருத்த பசு ஒன்று, மரத்தடியில் இருக்கிறது. பார்த்த *அவர்* மனம் படபடத்தது. எவருடையதோ இது; ஆசைப்பட்டு ஆவது *என்ன என்று,* காமுற்ற மனத்தைக் கட்டுப் படுத்தினார். காளையை மரத்தடியிற் கட்டினார்.

வயிற்றுப் பெருமான் வாதித்தான். அமைதிப் படுத்த குளத்தில் இறங்கினார்.

விண்ணொளியாய், என்றும் விளங்குகின்ற சந்திரனும்,
தண்மை ஒழுக்கம், தளரவிட்டுத் தேய்ந்தானே.

அங்கே திருமண் தரித்த ஒரு திருவாளர். அவர் புளியோதரை ததியோதனத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, கோவிந்த கோவிந்த என்று கரைந்தபடியே கரையேறி, ஆலமரத்தை அணுகினர். காளை மாட்டைக் கண்டார். ஆ! என்ன அருமையான காளை' என்று, தாவி அதைத் தடவிக் கொடுத்தார். சாதுவா யிருந்தது; சபாஷ் என்று கூவினர்.

படிக்கட்டில் இருந்த சிவா, இவ்வளவையும் பார்த்தார். கட்டுச்சாத கைங்கர்யத்தை, நின்று கொண்டே நிறைவேற்றினர். வாய்கூட கொப்புளித்திலர்; கையலம்பினர். விரைந்து கரையேறினர். அவரை இவர் பார்த்தார். இவரை அவர் நோக்கினர். இருவர் பார்வையிலும், விஷமம் இருந்தது.

கோவிந்தா! காளை யாருடையது?

இது என்னுடையதுதான் சிவா. எட்டுக் காளைகள் இருக்கின்றன. ஒரு காளையை விற்றுவிட்டு, வளப்பான பசு ஒன்றை வாங்கலாம் என்று வந்தேன்.

கோவிந்தா! என்ன ஆச்சர்யம்! எங்கள் திருமாளிகையில் பத்துப் பசுக்கள். ஏராளமான பால். வேண்டாம் இத்தனை! விற்றுவிடு ஒன்றை! காளை ஒன்று வாங்கு என்பது, என் தர்மபத்தினியின் கட்டளை.

கன்றை இழந்து, பத்துநாள் ஆன பசு இது! கன்று இல்லையென்ருலும், ஒரு ஆண்டு கறக்கும். விற்க மனமில்லை. விதியின்றி ஓட்டி வந்தேன்!

சிவா! என்ன வியப்பு! என் குடும்பம் பசுவை எதிர் பார்க்கிறது. தங்கள் குடும்பம், காளை வேண்டும் என்று கருது கிறது. இருவரும் ஒரே இடத்தில் சந்திக்கிறோம். காளையும் பசுவும், ஒரே மரத்தில் கட்டப்பட்டன. எல்லாம் சிவன் செயல் என்று, கைகுவித்துக் கண்மூடினர் சிவா.

நஞ்சுகக்கும் நெஞ்சுடைய நாசகா ரச்சகுனி
துஞ்சியது கேட்டோம்; தூயநெறி வேண்டுவமே

எல்லாம் எம்பெருமான் கிருபை யென்று, முப்பத்திரண்டு பற்களும் வெளிப்பட, முறுவலித்தார் பாகவதர்.

கோவிந்தா! இரண்டையும் நாம் மாற்றிக் கொள்ளலாமா?

சம்மதம் இல்லாதவர்போல், சரியென்றார் சிவா. கயிறு மாறினர்; காளையும் பசுவும் கைமாறின.

திடீரென்று சிவா, திரும்பினார். ஒன்று கேட்க மறந்து விட்டேன்; சிவா! பசு எப்படி? என்று குறிப்பாகக் கேட்டார். அதைக் கேட்டு, கலகல நகைத்தார் பாகவதர்.

காலையில் ஒரு குடம் கோவிந்தா! மாலையில் ஒருகுடம் கோவிந்தா! "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்" என்றாள் எங்கள் ஆண்டாள். அதற்கு ஏற்ப, பகலில் ஒருகுடம் கோவிந்தா! என்று, ராகமாகப் பாடி குதூகலித்து வைணவர் குதித்தார். அதைக் கேட்ட சைவர், ஆனந்தம் கொண்டார்.

அது சரி! காளை எப்படி கோவிந்தா? என்றார் மாலடியார்.

பெட்டி வண்டியில் கட்டினாலும் சிவா; கட்டை வண்டியில் கட்டினாலும் சிவா; ஏரில் பூட்டினாலும் சிவா என்ற பதில் எழுந்தது. அது கேட்ட பாகவதர்க்கு, அங்கமெல்லாம் பொங்கி வழிந்தது பூரிப்பு. அதன்பின் இருவரும், தம்தம் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

சிறந்த பசுவுடன் வந்த சிவாவை, அல்லி கண்டாள். அவர் திறமையை வியந்தாள். அன்று இரவே சிவா, ஏழு குடங்களைச் சித்தப்படுத்தினார். பசுவை நீராட்டி, மஞ்சளிட்டு, குங்குமம் வைத்துக் கும்பிட்டாள் அல்லி.

மறுநாள் காலை வெள்ளிக்கிழமை. கம்பு, பொட்டு, பிண்ணாக்குக் கலந்து வைத்தாள். கரக்க எண்ணிச் சிவா, பசுவின் காம்பைத் தொட்டார்.

ஆழிபோல் ஆழ்ந்த அறிவுடையார் தாள்மலரில்,
வாழத தலைவைத்து, வாழ்கலைகள் கற்போமே.

டமால். குதிக்கால் உதையால் குடம் உடைந்தது. தாவிக் குதித்து, சிவா தப்பினர். அல்லி அஞ்சினள். புதுப்பசு சிவா! எல்லாம் போகப் போக சரியாய்விடும் என்று, சமா தானம் செய்தார்.

மாட்டைத் தடவிக் கொடுத்தார். மறுபடி காம்பைத் தொட்டார். படால். உருவான மற்றொரு குடமும் உடைந்தது. இப்படியே ஏழு குடங்களும் சுக்கு நூருயின.

பகலில் முயன்ருர். மாலையில் முயன்ருர். ஒரே கதைதான்.

ஏமாற்றும் உம்மை, எவனே ஏமாற்றி விட்டானே என்று, கலங்கி நிற்கும் சிவாவை நோக்கி, அல்லி கண்ணீர் வடித்தாள்.

அவன் ஏமாற்றவில்லை சிவா! சொல்லித்தான் கொடுத் தான் என்ருர். என்ன சொன்னன்? என்ருள் அல்லி.

காலையில் ஒரு குடம் கோவிந்தா! பகலில் ஒரு குடம் கோவிந்தா! மாலையில் ஒருகுடம் கோவிந்தா! சொல்லித்தான் கொடுத்தான சிவா! அச் சொல்லின் பொருளை, இப்போது தான் அறிகிறேன் என்ருர். இங்கு செய்தி யிது.

அங்கே பாகவதர் கதை என்ன?

காளையுடன் வந்தார். மனைவியைக் கண்டார். அவளிடம் தன் சாமர்த்தியத்தை, அதி ரகசியமாக அறிவித்தார். கணவர் திறமை கண்டு, அவள் அவர்க்குக் கண்திருஷ்டி கழித்தாள். ஒரு பெட்டிவண்டியை, இரவே இரவல் வாங்கினர். விடிந்தால் வெள்ளி. வைகறையில், இருவரும் வைதிகம் செய்தனர்.

புதுமாடு. எதற்கும் நீ முதலில் ஏறிக்கொள் என்ருர் பாகவதர். எழுந்தாள் துணைவி. பண்டியில் ஏறினள். அதன் பின், புது மாட்டை வண்டியில் பூட்டினர். காளை மாடுதானே!

கற்றறிந்தார் கற்றவண்ணம் கண்டறியேன்; வாய்சாலம் பெற்றறிந்த என்பிழையைத் தீர்த்தருளெம் பெம்மானே?

குபீரென்று ஓடினுல், என்ன செய்வது? அதனுல் தாமும் குதித்து ஏறினுர்.

கோவிந்தா! உம். புறப்படு என்று, காளை மாட்டின்மேல் கைவைத்தார். இருவரின் இதய வேகம் அறியாத அக் கோயில் மாடு, படக்கென்று படுத்தது. எதிர் வீட்டுப் பக்கத்து வீட்டுச் சிரிப்பு, கலகல என்று எதிரொலித்தது.

நாணினள் மனைவி. வண்டியை விட்டு இறங்கி, அவள் ஓடி மாளிகையுள் ஒளித்தாள்.

பயப்படாதே கோவிந்தா! புதுமாடு இது. பழகப் பழகச் சரியாய்விடும் என்று, படுத்த மாட்டை எழுப்பப் படாத பாடு பட்டார்.

ஒவ்வொரு நாளும் இதேகதி. வரவர வெறுத்தது மனம். அரை ஏகரா நிலம் அவர்க்கு இருக்கிறது. கவலை யில்லை என்று கருதினுர். காளையை ஏரில் பூட்டினுர். எருவடிக்க, கட்டை வண்டியில் கட்டினுர். பயனே இல்லை. பார்வைக்கு அழகா யிருக்கிறது. ஆனுலும் படுங்காங் கொள்ளித் தனந்தான் அதற்குப் பழக்கம்.

எப்படியோ ஒரு பாவி, இவரை ஏமாற்றி விட்டானே என்று, மனம் கலங்கினள் மனைவி.

வண்டியில் கட்டினுலும் சிவா! ஏரில் பூட்டினுலும் சிவா! என்று சொல்லித்தான் கொடுத்தான் கோவிந்தா! என்று, மூக்கைச் சிந்தினுர் பாகவதர்.

அழுவதா சிரிப்பதா என்று, மனைவி அறியாது திகைத்தாள்.

சிவன்கோயில் பசு. அதை நம்மதென்று ஏய்த்தோம்; கைவிட்டுப் போனதே நல்லது என்று, இருவரும் இங்குத் திருப்தி யடைந்தனர். அதனுடன், காளையை, உள்ளூர் சிவன்

இல்லறத்தான், மெய்ஞ்ஞானி யென்றே, அறக்கடவுள்
நல்லாசி செய்சனகன் போலாதல், எந்நாளோ.

கோயிலுக்குத் தானமாகத் தந்தனர். அதனால், புண்ணியவான் புண்ணியவதி யென்று, ஊர்ப் பிரமுகர்கள் தந்த புகழ்மாலை சூடினர். அதுவும் ஒரு லாபந்தான்.

பெருமாள் கோயில் காளை அது ; ஒரு பயனும் இல்லை. தொலைந்தது நலந்தான் என்று, சிவாவும் அல்லியும் இங்கு சிரித்தனர். கைவந்த பசுவை, அவர்களும் தங்கள் ஊர்ப் பெருமாள் கோயிலுக்கே தானமாகத் தந்தனர் என்று கேள்வி.

இத்தகைய சம்பவங்கள் எத்தனையோ உண்டு. இத்தகையரை சைவரென்றோ, வைணவர்களென்றோ சொல்ல முடியுமா? பகவத் சம்பந்தமன்றி, கள்ளம் கபடறியாத பாகவதர்கள் எங்கே? திருமண் தரித்ததனால், தாமே வைணவர் என்று திமிதமிடும் இவர்கள் எங்கே ?

சிவத்தின் திருவடியைச் சிந்தித்து, சிவமயமான சிவனடியார் எங்கே? நீறு பூசி, நாங்கள் அடியார்கள் என்று நடனமிடும் இவர்கள் எங்கே ?

சைவத்தில் வைஷ்ணவத்தையும், வைஷ்ணவத்தில் சைவத்தையும் காண்பதுதான், உண்மை யடியவர்கட்கு இலக்கணம். எந்த நூலிலும் இதே செய்திகள்தான், ஏராளமாக இருக்கின்றன. அந்த அருமை வரலாறுகளை, அடுத்தடுத்து வரும் இதழ்களில் ஒரு சிறிது ஆராயலாம்.

வாழ்க அடியவர் வளம் !

அடங்கும் மனத்தில் ; அமரர் குடிபுகுவர் ;
அடங்கா இடத்தில், அவுணஇருள் வாழும்மே.

எல்லாம் உனக்காக !

(ஆ. கி. ரங்கராஜன்)

ஆம் ! எல்லாம் உனக்காகவேதான் இறைவன் படைத்திருக்கிருன். நீ யார் என்பதை எண்ணிப் பார். தெரியவில்லையானுல், ஆழ்ந்து ஊன்றி, ஆராய்ந்து பார். விளங்கவில்லையா? சரி. இப்போது இறைவனின் படைப்பில் நீ எந்த நிலையில் இருக்கிருய் ? உயர்ந்த பிறப்பாகிய மானிடனுக இருக்கின்ருய். உனக்கு இறைவன் கொடுத்திருப்பது என்னென்ன என்பதை யோசித்துப் பார். உன் சுற்றிலுமுள்ள அனைத்தையுமேதான் உன்பொருட்டு இறைவன் தந்திருக்கிருன். அவற்றினைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தை அறிந்துகொள்ளப் பகுத்தறிவையும் தந்திருக்கின்ருன்.

விண்ணை முட்டும் மலைகளும, அளப்பதற்கரிய ஆழ்கடல்களும் உனக்காகவே இறைவன் படைத்துளன். மலைகள் உயரிய மூலிகைகளைத் தருகின்றன. தாவர வர்க்கங்களைத் தருகின்றன. இன்பக் குளிர்ச்சியையும் அளிக்கின்றன. இவற்ருல் நீ பெரும் பயன் அடைகின்ருய். கடல்கள் முத்துக்களையும், உப்பையும், வேறு பல பொருள்களையும் தருகினறன. ஆரோக்கிய மளிக்கும் காற்றையும், மழையையும் தருகின்றன. அவற்ருலும் நீ பெரும் பயன் அடைகின்ருய். ஏனைய உயிர் வர்க்கங்களாலும் நீ பெரும் பயன் அடைகின்ருய். சூரிய வெப்பத்திலுலும், சந்திரனின் குளிர்சசியாலும் நீ அடையும் நன்மைகள் அளவற்றன. சுருங்கக் கூறின், ஐம்பெரும் பூதங்களையும், நீ பயன்படுத்திக் கொள்கின்ருய். இவ்வாருக, இறைவனுல் சிருஷ்டிக்கப் பட்டவைகளை எல்லாம் உனக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நீ இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன ?

சிறியவர்சொல் லாஞலும், செம்மையதேல் கேட்பம் ;
சிறிய விகர்ணனைப், பாரதம்சிந் திக்கிறதே.

*   *   *   *

நல்லவை, கெட்டவை என்பது இரண்டு. நல்ல பொருள்கள், நல்ல பிராணிகள், நல்ல உணவுகள், நல்ல செயல்கள், நல்ல வாழ்வு இவ்வாறு ஒரு பிரிவு. கெட்ட பொருள்கள், கெட்ட பிராணிகள், கெட்ட உணவுகள், கெட்ட செயல்கள், கெட்ட வாழ்வு இவ்வாறு ஒரு பிரிவு. இவை எல்லாம் உனக்காக !

நீ எதனை விரும்புகின்றாய் ? நல்லவற்றையேதான் விரும்புவாய். ஏன் ? நல்லவற்றால் நன்மை விளையும். கெட்டவற்றால் தீமை விளையும். இவற்றில் நீ ஒன்றை ஆலோசிக்க வேண்டும். நல்ல பொருள்களையும், நல்ல உணவையும், நல்ல வாழ்வையும் விரும்பும் நீ, நல்ல செயல்கள் புரிவதை மறந்துவிடக் கூடாது. மறந்து விடுவாயெனில், அனைத்துமே உனக்குத் தீமை தருவனவாக ஆகிவிடும். நல்ல செயல்கள் என்றால் என்ன ? அவற்றைச் செய்துதான் ஆகவேண்டுமா என்று வினவினால், ஆம். செய்துதான் ஆகவேண்டும். உன்னால் முடிந்த அளவு நல்லன செய்தால் போதும். அதற்காக வானளாவிய சிகர, கோபுர, மதிலகள் கூடிய ஆலயங்களை நிர்மாணிக்க வேண்டுமென்றோ, இலட்சக் கணக்கானோருக்கு இலவச உணவுகள் அளிக்கவேண்டு மென்றோ அவசிய மேதும் இல்லை. கட்டாயமும் இல்லை. முடிந்தால் செய். அல்லது சாத்தியமான காரியங்களைச் செய்.

மிகப் பெரும் தான தர்மங்களைச் செய்கிறேனென்று ஆர்வம் கொள்ளாதே. மிகச் சிறிய காரியத்திற்கும் நம்மைப் போற்றுகிறார்கள். நம்மால் முடிந்தவரை பெரிய காரியங்கள், நல்ல செயல்கள் செய்வோம்.

—தொடரும்

வாணிகத்தில் நேர்மை வளர்ந்திட்டால், வான்பொழியும்; கோணுமல் எங்கிலமும் கோடிவளம் ஈயும்மே.

வருந்துகிறோம்.

இதுவரை அமிர்தவசனியின அட்டையின் மேல் பகுதியில், தன் கைத்திறனால், மனத்தின் பக்திப் பக்குவத்தால், கந்த புராணம், பெரிய புராணம் முதலியவற்றின் முக்கியப் பகுதிக்கு அழகாக, அமைப்பாகப் படம் எழுதி வந்தவரும், திருவிளையாடற் புராணத்திற்குப் படம் எழுதித் துவக்கி வைத்தவருமான பண்புநிறை ஓவியர் கே. ஆர். சர்மா அவர்கள் மண்ணுலகை விட்டு மறைந்தது, ஓவியர் உலகிற்குப் பெரும் நஷ்டம். அவர் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் ஆதமா சாந்தியடைவதாக !

—ஆசிரியர்.

Saint Arunagiri and Tagore.

Inspiring parallelisms of divine experience fill the mind when we read the poems of Tagore alongside the songs of Saint Arunagiri. The universalism of divine experience, of God concept, of the methods of approach to the Divine mercy, are strikingly the same with these two religious savants Poetry and song go together with them as the most effective means of search after divine grace and self expression. The song and the sense, with both, march in competing unison, and as they both emanated from the depths of universal

love, they became the admiration of the literate world and the inspiration of the rest of it. As literature their songs and poems have come to be regarded as of the highest order, incomparable in the enternalisation of ideas and emotions that unify God and man. Tagore in his own words would declare that he sought the Lord, ever in his life with his songs and that the songs led him from door to door, that the songs taught him the all that he learnt, nay, the secret paths and mysteries of the country of pleasure and pain, that they finally led him on to the gates of the palace of Divinity. Saint Arunagiri prays for the gift of that fullness of songs (திறைப்புகழ்) which will accomplish the rest for the human mind. *When the subject (the singer) becomes the song* what transformations are achieved! The song of the heart kindless the fire that exterminates separatism and along with it hatred and all mundane impurities of the heart, establishes the universalism of love, humility to the world expression of Divinity and illuminates the one-ness of God and man—the everlasting fullness of Vedantic wisdom, Brahma Gnanam of the Upanishads. Countless are the passages in. Tirupughazh and allied works that inculcate the upanishadic truth that the song is the

Lord, that the singer is the Lord and that the creative world and all that it implies are of the Lord. The only Lord goes by many names and forms—one such being "Muruga".

Both the saints have instilled in their poems that they had themselves perceived, that God is one, (no second), God is everywhere the giver of all things, pleasure or pain in fullness of mercy.

In one of the very first works "Naivedya", Tagore has shown that his was a realised consciousness.

"They who are near to me do not know
that you are nearer to me
than they are
They who speak to me do not know
that my heart is full with your
unspoken word
They who crowd in my path do not
know that I am walking
alone with you
They who love me do not know
that their love brings you
to my heart"

In this condition of the mind, both the saints pray for themselves and all the world else—

"Oh Lord! stand in my heart. I have sat down at Thy feet. Only let me make my life a simple and straight life a *flute of the reed for Thee to fill with music*"—Lord Krishna of the *Flute must occur to any mind.*

Has not Andal asked us to think of Him and sing? That has been the gateway to heaven from the beginings of time. A realised Bhaktha or Saint is no other than what made so of him

Tagore and Arunagiri have both put the Vedic *truths in their celestial songs for men* to sing and profit, to know and to live.

The heart in this condition does not much desire to worship and pray. *It is content* with silence and solitude and merely calling *on God's name.*

The child with us learnt to call "mother" delights in calling her a hundred times "mother, mother". A sage is such a child.

Saint Pattinathar said in immortal strains *in identcal terms*—

பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து
இட்ட பிச்சை யெல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல் உழன்று
நன் மங்கையரை
தாய்போல் கருதி தமர்போல் யாவர்க்கும்
தாழ்மை சொல்லி
சேய்போல் இருப்பர் கண்டீர்! உண்மை
ஞானம் தெளிந்தவரே.

Thiruppugal Mani.

155

சொல்லார் சுருதிப் பிரணவநீ !
துயர்சால் உயிர்கட்(கு) அருளிறைநீ !
இல்லார் குறைகண்(டு) ஈஇறைநீ !
எளியேன் உள்நோய் இறுமாறு,
வல்லார் அருளைத் தாராயோ ?
வையம் அதனில் என் போன்ற
கல்லார், பொல்லார், எல்லார்க்கும்
கதிதங் தருளும் குகதேவே !

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. No.M. 5390 Amirthavachani ஆனி மீ (1962 அமிர்தவசனி 14-3

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளர்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982
விநியோகஸ்தர்கள்:
கார் & கம்பெனி
1/6, செகின் லைன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.